Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 04 சனிக்கிழமை (20.09.2014) பக்கங்கள் 20 ஓசை - 354

# இரணைமடு-யாழ்ப்பாண குடிநீர் திட்டத்தை சுய இலாபத்திற்காக தடுக்கும் கூட்டமைப்பு

## மக்கள் கண்டிக்க வேண்டுமென ஈ.பி.டி.பி. கோரிக்கை



இரணைமடு - யாழ்ப்பாணம் குடிநீர்த்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தடையாக உள்ளது. கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்ட மக்களின் வாழ்வாதார திட்டமாகவே இரணைமடு குடிநீர்த் திட்டம் அமைந்துள்ளது. இதை அரசியல் சுய இலாபங்களுக்காக எதிர்க்கும் கூட்டமைப்பை மக்கள் கண்டிக்க வேண்டும்.

(19)ஆம் பக்கம் பார்க்க...

## நல்லிணக்கத்திற்கான உதவி கோரவில்லை இலங்கை

### ஐ.நா. கவலை

நல்லிணக்கம் தொடர்பான எவ்வித உதவிகள் எதனையும் இலங்கை கோரவில்லை என ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கை நல்லிணக்கம் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவிகளை கோரத் தவறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ

(19)ஆம் பக்கம் பார்க்க...

### ஒக்ரோபர் 13 இல் யாழ்.வருகிறார் ஜனாதிபதி

எதிர்வரும் ஒக்ரோபர் 13 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலும் கலந்து கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விஜயம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடலொன்று, ஜனாதிபதி செயலக சிரேஷ்ட பிரதிச் செயலாளர் அன்டன் பெரேரா தலைமையில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று

(19)ஆம் பக்கம் பார்க்க...

# தனிநாட்டுக் கோரிக்கையை நிராகரித்தது ஸ்கொட்லாந்து

தனி நாடாவது குறித்து நடத்தப்பட்ட பொது வாக்கெடுப் பில் பிரிட்டனிலிருந்து பிரிய ஸ்கொட்லாந்து மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனிலிருந்து பிரிந்து தனி நாடாவது குறித்த பொது வாக்கெடுப்பு ஸ்கொட்லாந்தில் நேற்று முன்தினம் நடைபெற் றது.

இந்த வாக்கெடுப்பின் முடிவுகள் நேற்று அதிகாலை முதல் வெளியாகத் தொடங்கின. இதில், 55வீத வாக்குகள் ஸ்கொட்லாந்து, பிரிட்டனிலிருந்து பிரிய எதிர்ப்புத் தெரிவித்து பதிவு

(19)ஆம் பக்கம் பார்க்க...



## பிரிவினைக்கான கோரிக்கையை நிராகரிப்பர் இலங்கை மக்கள்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

நாட்டுக்கு நாடு பிரச்சினைகள் வேறுபட்டிருக்கின்ற போதிலும், தற்போதைய நிலையில் பிரிவினைக்கான கோரிக்கை தொடர்பாக இலங்கையில் கருத்துக் கோரப்பட்டால் மக்கள் அதனை நிராகரித்து விடுவார்கள் என்றே தான் நம்புவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பி.பி.சி.யிடம் தெரிவித்துள்ளார்.

ஸ்கொட்லாந்தில் பிரிவினை கோரி மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடந்து முடிந்திருக்கும் நிலையில், அது போன்ற ஒரு ஏற்பாடு இலங்கை தமிழர் பிரச்சினைக்கும் பொருந்துமா என்று கேட்டதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்கொட்லர்ந்தில் காலம்கால

(19)ஆம் பக்கம் பார்க்க...

## பிரிவினையைத் தடுப்பதற்கு அதிகாரப் பகிர்வு அவசியம்

### கூறுகிறார் சம்பந்தன்

(லண்டன்)

பிரிவினையைத் தடுப்பதற்கு அதிகாரப் பகிர்வு அவசியம் என்பதனையே ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற வாக்கெடுப்பு முடிவுகள் வெளிப்படுத்துவதாக இரா. சம்பந்தன் பி.பி.சி.யிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமது அரசியல் தலைவிதி என்ன என்பது குறித்த முடிவை ஸ்கொட்லாந்து மக்களே எடுக்கும் வகையில் நடத்தப்பட்ட மக்கள் கருத்தறியும்

(19)ஆம் பக்கம் பார்க்க...

## மின் கம்பத்திற்கு குழி தோண்ட வெளிவந்தன எலும்புக்கூடுகள்

### வேலணை வங்களாவடியில் சம்பவம்

யாழ். வேலண்ண வங்களாவடி சந்தி, வேலணை பிரதேசசபைக்கு முன்பாக 4 குழிகளில் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் மின் கம்பத்தை நடுவதற்காக அந்தப் பகுதியில் தோண்டும் போது, எலும் புக்கூடுகள் இருப்பதைக் கண்டு ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம், ஊர்காவற்றுறை பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சபேசனின் உத்தரவுடன்

(19)ஆம் பக்கம் பார்க்க...

## இறந்த குழந்தைக்கு உயிர் வந்ததா? தெல்லிப்பளையில் பரபரப்பு

யாழ். போதனா வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு சாவடைந்ததாகத் தெரிவிக்கப்படும் 9 மாதக் குழந்தை ஒன்று மீண்டும் உயிருடன் மீண்டதாகக் கூறப்படும் சம்பவத்தால் உடுவில் மல்வம் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தெரியவந்துள்ளதாவது, உடுவில், மல்வம் பகுதியில் 9 மாதக் குழந்தை ஒன்று கடந்த 27 நாட்களாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தது.

இந்த நிலையில் குறித்த குழந்தை இறந்து விட்டதாக நேற்று முன்தினம்

(19)ஆம் பக்கம் பார்க்க...




## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3775)

# யாழ். மாவட்டத்தில் வறட்சி நிவாரணம்; வைபவரீதியாக நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் குடாநாட்டின் பல பகுதிகள் கடும் வறட்சிக்குள்ளாகியுள்ளன. இப்பிரதேசங்களில் வாழும் மக்களது தேவைகளைக் கருதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அமைச்சரவையில் விசேடமாக முன்வைக்கப்பட்ட திட்டத்திற்கு அமைவாக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நேற்று வறட்சி நிவாரண உதவித்திட்டம் முதற்கட்டமாக வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் இந்த வறட்சி நிவாரணத்திற்காக உள்வாங்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக நேற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உருளைக்கிழங்குகள் வழங்கப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கு உட்பட்ட பண்டத்தரிப்பு கூட்டுறவுச் சங்கத்திற்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 461 குடும்பங்களுக்கும் மானிப்பாய் கூட்டுறவுச் சங்கங்கத்திற்கு உட்பட்ட 412 குடும்பங்களுமாக மொத்தம் 873 குடும்பங்களுக்கு மானிப்பாய்ப் பிரதேசத்தில் இந்த உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இவ் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வை யாழ். மாவட்ட அமைச்சரின் ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி.குகேந்திரன் (ஜெகன்) உத்தியோகபூர்வமாக மாதகல் பகுதியில் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன், சண்டிலிப்பாய் பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர் ஜீவா மற்றும் நிறஞ்சலா, அப்பகுதி கிராம உத்தியோகத்தர்கள், பயனாளிகள ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஏ-9 வீதியில் கொக்காவிலுக்கு அண்மையில் நேற்றுக்காலை தென்பகுதியிலிருந்து ஓடு ஏற்றிவந்த லொறி தடம்புரண்ட போது... (எஸ்.பி)

## கூட்டுறவுக் கிளையில். திருட்டு சுன்னாகம் பொலிஸார் விசாரணை

(சுன்னாகம்)

சுன்னாகம், மரியபுரத்தில் வசித்துவரும் பொன்னுத்துரை மனோகரன் (வ்யது - 55) என்பவர் சுன்னாகம், மயிலணி வீதியில் அமைநதுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 17 ஆம் திகதி பி.பு. 6.00 மணியளவில் வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு வீடு சென்று மறுநாள் காலையில் கடைக்கு வந்த போது அங்கு பூட்டுக்கள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் கடையை திறந்து பார்த்த போது 24,710 ரூபா பெறுமதியுடைய பொருட்கள் திருட்டுப் போயுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இத்திருட்டு தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவோ திருடிய பொருட்கள் கைப்பற்றப்படவோ இல்லை.

## ஆண்டு விழா

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பு நிகழ்வுகளும் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## உலர் உணவு விநியோகம்

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் இலகு வேலைத்திட்டத்திற்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அண்மையில் இலகுவேலைத் திட்டம் மண்டைதீவுப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த தன் அடிப்படையில் இலகு வேலைத்திட்டத்தின் கீழ் பங்கு கொண்ட குடும்பங்களுக்கே இவ்வாறு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை இம்முறை உலர் உணவுப் பொருளாக அரிசி மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு 8 கிலோ அரிசி வீதம் வழங்கப்படுவதாகவும், அங்குள்ள ப.நோ.கூ.சங்கம் மூலமாக இவ் உலர் உணவு விநியோகிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## ஆய்வுநூல் வெளியீடு


(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் 'யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்' என்னும் ஆய்வுநூல் வெளியீடு நாளை பிற்பகல் 3.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் குழந்தை ம.சண்முகலிங்கம் வாழ்த்துரையையும், பேராசிரியர் நா.சண்முகலிங்கன் (முன்னாள் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர், சமூகவியற்துறை தலைவர்) வெளியீட்டுரையையும் வழங்குவர்.

நூல் வெளியீட்டை அடுத்து 'வலம்புரி' பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம் நயப்புரை செய்வார். சிறப்புப் பிரதிகள் வழங்கலையடுத்து பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஏற்புரை நிகழ்த்துவார். சி.பத்மராஜா நன்றியுரைப்பார்.

அனைவரையும் அன்புடன் விழாக்குழுவினர் அழைத்துள்ளனர். (68)





பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் நேற்று நண்பகல் 12.30 மணிக்கு முன்பள்ளி வளாகத்தில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றது. இந்நிகழ்வில் எஸ்.டி.சி. நிறுவனத்தின் யாழ். மாவட்ட திட்ட முகாமையாளர் மாட்டீன் கலந்துகொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் செ.நாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர், முகமாலை பாடசாலை அதிபர், கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (37)

## இணுவிலில் விபத்து; இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவிலடியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இவ்விபத்தில் இணுவில் தெற்கைச் சேர்ந்த கமலேஸ்வரன் (வயது - 28) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

நிறுத்தியிருந்த மோட்டார் சைக்கிளுடன் எதிரில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ,25)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1093 | திகதி 18.09.2014

வெற்றி எண்கள்: 11 31 43 46 | ஆங்கில எழுத்து: V

ஜக்பொட் பரிசு ரூ. 3,91,65,540/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,91,65,540/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | ரூ. 6,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 260 | 1,000/= | ரூ. 2,60,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 476 | 1,000/= | ரூ. 4,76,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12281 | 60/= | ரூ. 7,36,860/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6404 | 40/= | ரூ. 2,56,160/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 160482 | 20/= | ரூ. 32,09,640/= |
| ஆங்கில எழுத்து | 23220 | 20/= | ரூ. 4,64,400/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 70,03,060/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 39,479,460/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.09.22 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333646/7

(C/3797)


## திருமறைக் கலாமன்றத்தில் இன்றும் நாளையும் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் இரு நாள் கலைவிழா இன்றும் நாளையும் இரவு 8.45 மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

கலைவிழாவின் முதல் நாள் நிகழ்வுகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்கள் வழங்கும் நடனங்களுடன் சிறப்பு அரங்க ஆற்றுகைகளாக யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் 'மதுரையம்பதி' (கண்ணகி) நாட்டிய நாடகமும், யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகள் வழங்கும் 'வீரன் தாவீதன்' வடமோடி நாட்டுக்கூத்தும் இடம்பெறும். இவ்விரு ஆற்றுகைகளும் இப்பாடசாலை மாணவர்களால் மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பைப் பெற்ற படைப்புக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் வழங்குவார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்கள் வழங்கும் நடனங்களுடன், சிறப்பு ஆற்றுகையாக திருமறைக் கலாமன்ற கலைஞர்களால் அண்மையில் புதிதாக தயாரிக்கப்பட்ட 'குசேலர்' இசை நாடகமும் மேடையேற்றப்படும்.

நிகழ்வில் சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன் வழங்குவார். (27)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

"அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3727)

# பராமரிப்பற்ற கழிவு வாய்க்கால் துர்நாற்றத்தால் சிரமப்படும் மக்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன் துறை வீதி பிரதான தபாலகத்திற்கு முன்பாக உள்ள கழிவு நீர் வாய்க்கால் பராமரிப்பு இன்றி துர்நாற்றம் வீசுவதாக அவ் வீதியால் பயணிப்போர் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக இவ் வாய்க்காலின் மேல் போடப்பட்டிருந்த கொங்கிறீற் மூடிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் வடிகான் துப்புரவு செய்யப்பட வில்லை இதனால் கழிவு நீர் தேங்கி நிற்பதுடன் கொடிய நோயை உண்டு பண்ணக் கூடிய நுளம்பு பெருகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு திறக்கப்பட்டுள்ள வடிகாணிலிருந்து துர்நாற்றம் வீசுவதால் இவ்வீதியில் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வடிகால் கழிவு நீர் வடிந்தோடும் வகையில் அமைக்கப்பட வில்லை எனவும் இதனால் தான் கழிவு நீர் தேங்கி நிற்பதாகவும் பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

# சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த முக்கிய ஆவணங்கள் திருட்டு

(திருநெல்வேலி)

கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியில் உள்ள ஒருவரின் 4500 ரூபா பணம், அடையாள அட்டை மற்றும் பல முக்கிய பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மதியம் இச் சம்பவம் இடம்பெற்றது. அதே வீதியில் உள்ள தனது வெற்றுக் காணியொன்றை துப்பரவு செய்யும் வேலைக்காக இவர் சென்றுள்ளார். வளவுக்குள் சைக்கிளை நிறுத்திவிட்டு சைக்கிளின் முன்பக் க்க் கூடைக்குள் சேட்டைக் கழற்றி வைத்துவிட்டு, தன்னுடன் எடுத்து வந்த பையையும் சைக்கிளில் கொழுவிவிட்டு இவர் வளவில்வேலையை மேற்கொண்டுள்ளார்.

இடையில் வந்து பார்த்தபோது சேட்பொக்கட்டுக்குள்ளிருந்த 4500 ரூபா பணம் காணாமற் போயுள்ளது. பையைப் பார்த்தபோது அதற்குள்ளிருந்த அடையாள அட்டை, வங்கிப் புத்தகம், அடகுத்துண்டு, கடடக் கொப்பி என்பன திருடப்பட்டிருந்தன. பணமும், முக்கிய ஆவணங்களும் திருட்டுப் போனதினால் அவர் மிகவும் அதிர்ச்சிக்குள்ளானார்.

ஆனால் நேற்று முன்தினம் மாலை கட்டப்பிராய் கலைமணி வீதியில் உள்ள வீடு ஒன்றின் வளவுக்குள் பணம், அடையாள அட்டை என்பனவற்றைத் த்விர ஏனைய பொருட்கள் யாவும் எறிந்து கிடக்கக் காணப்பட்டன.

அவ்வீட்டுக்காரர் கடைக் கொப்பியில் இருந்த கைத்தொலை பேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு இவ்விடயத்தைத் தெரியப்படுத்தியதன் மூலம் களவு கொடுத்தவர் உடனடியாக அவரது வீட்டுக்கு சென்று பொருட்களைப் பெற்றுக் கொண்டுள்ளார். (137)

# இந்து வாலிபர் சங்கத்தால் சிறுவர் இல்லங்களுக்கு உதவி

(மானிப்பாய்)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள அன்பு சிறுவர் இல்லம், பாரதி சிறுவர் இல்லம், இனியவாழ்வு சிறுவர் இல்லம் என்பனவற்றிற்கு உதவிகள் வழங்கப்பட்டன.

அண்மையில் வட்டு இந்து வாலிபர் சங்கத்தலைவரும் சட்டத்தரணியுமான க.சுகாஷ் தலைமையில் சென்ற வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்க அங்கத்தவர்கள் இல்ல பிள்ளைகளை சந்தித்து கலந்துரையாடினர்.

மேற்படி இல்லங்களில் வசிக்கின்ற பிள்ளைகளுக்கென கற்றல் உபகரணங்கள், உடுபுடைவைகள், உணவுப் பொருட்கள் என்பவற்றினை வழங்கி பிள்ளைகளை மகிழ்வித்தனர்.

ஏற்கனவே வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் மேற்படி இல்ல பிள்ளைகளின் வளர்ச்சிக்கென பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (54)

# கூட்டுறவு ஊழியர்களுக்கு தொழிற்சங்க மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவு ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் விரைவில் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க மாநாடு ஒன்றை நடாத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுடன் தொடர்புடையவர்களின் கவனத்திற்கு கொண்டுவரவும், நீண்ட காலமாக ஊழியர்கள் எதிர்நோக்கும் பல் வேறு பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் மேற்படி ம்ாநாடு ஒன்றை நடாத்துவதற்கு தொழிற்சங்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவு ஊழியர்கள் பணிபுரிகின்றார்கள். இவர்களை ஒன்றிணைத்து அவர்களின் உரிமைகளைபெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்டே இம்மாநாடு நடாத்தப்படவுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.




ஐயா, எங்கள் தங்கம் சிவசிவா.... பிரதம நீதியரசர், மாண்புமிகு முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் அவர்களே....!

உங்கட பேச்சும் போக்கும் எங்களுக்குக் குழப்பைத்தையே தருகுதய்யா....

எங்களுக்கு மட்டுமில்லை, இந்த உலகத்தில இருக்கிற எல்லாருக்கும்தான் குழப்பத்தை உண்டாக்கியிருக்கு.

உங்களை மனசார ஆதரிச்ச யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகைக்கே குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறீரய்யா....

அதாலதான் 'மத்தியும் மாகாணமும் பிரச்சினைப்படாமல் ஒருமித்த கருத்தோட இயங்க வேணும். அப்பதான் மக்களுக்கு நன்மை கிடைக்கும்' எண்டு சொல்லியிருக்கிறார் ஆயர்.

அவருக்கு மட்டுமில்லை, உங்களை ஒரு படிச்ச மனிசன் எண்டு நம்பித் தங்களுடைய பொன்னான வாக்குகளை எல்லாம் போட்டது மட்டுமல்லாது, தங்கட அதிகாரத்தைப் பயன்படுத்திச் சனங்களையும் வாக்குப்போட வைச்ச உத்தியோகத்தர்மாருக்கும் உங்களில பெரிய ஏமாற்றம் வந்திருக்கு.

நீங்கள் தாறுமாறாகப் பொய்யும் புரட்டும் சொல்லிறியள் எண்ட அபிப்பிராயம்தான் இப்ப பரவலாக எல்லா இடங்களிலயும் கதை.

இதை மறைக்கிறதுக்கு நீங்கள் அரச எதிர்ப்பு வேசம், சிங்கள மறுப்பு வேசம், தமிழ்த்தேசிய வேசம், கடுந்தேசியவாதி வேசம் எண்டு பல வேசங்களைப் போட்டுக்கொண்டு நாடகமாடுகிறியள் எண்டும் சனங்கள் அபிப்பிராயப்படுகுதுகள்.

இப்பிடி நீங்கள் குதிச்சுக் கூத்தாடினால் சனங்களின்ரை பாடுதான் பெரும்பாடாகப்போகுது.

இப்பிடித்தான் முந்திப் புலிகளும் கடும்பிடி பிடிச்சுக் கவிண்டவை எண்டதை நீங்கள் மறந்திட்டியள்...

அப்பிடியொரு நிலை இனியும் வரக்கூடாது எண்டுதான் எல்லாரும் விரும்புகினம். உங்களைக் கனபேர் விரும்பி, உங்களுக்கு அதிகப்படியான வாக்குகளைப் போட்டதுகூட இதுக்காகத்தான்.

அதாவது, கொஞ்சம் படிச்ச மனிசன். சிங்கள ஆட்களும் மதிக்கிற ஓராள். கொஞ்சம் நிதானமாகச் சிந்திப்பியள் எண்டுதான் எல்லாரும் நம்பினவை.

ஆனால் நீங்களோ... தேர்தல் எண்டு அரசியல்ல குதிச்ச பிறகு அடியோடயே மாறீட்டியள்...

முடிசூடின உடன நீங்கள்தான் ராஜாதி ராஜா எண்டு நினைக்கிறியள்... இதாலதான் இந்த வீம்புக்குணம் வந்திருக்கு.

உங்கட நடவடிக்கைகளையும் நீங்கள் மத்தியோட இணங்க மாட்டன் எண்டு அடம்பிடிக்கிறதையும் மனசில வைச்சுத்தான் ஆயர் இப்பிடிச் சொல்லியிருக்கிறார்.

இது உங்களுக்கும் நல்லாய் விளங்கும்.

நீங்கள் மத்தியோட அடம்பிடிக்கப் பிடிக்க உங்களுக்கு நன்மைகள் தாராளமாகக் கிடைக்கும்.

புலம்பெயர் தமிழர்களும் கள்ளத் தமிழ்த்தேசியவாதிகளும் உங்களைப் புகழ்ந்து தள்ளுவினம்.

உங்களுக்கும் போதை தலைக்கு ஏறும்.

இந்த றேஞ்சில நீங்கள் போனால், உங்களைக் கொண்டுபோய் தியாகச் சிகரம், புனிதப் புலி (மன்னிக்கோணும்... உங்களுக்குப் புலி எண்ட வார்த்தை பிடிக்காது. புனிதச்சிங்கம் எண்டும் சொல்லேலாது. சிங்கத்தை நீங்கள் உள்ளுக்குள்ளை விரும்பினாலும் இப்ப அதை வெளியில சொல்லிறதை விரும்ப மாட்டியள்....) எண்டு போற்றிப் புளுகினாலும் புளுகுவார்கள்.

ஆனால்.....

உங்களை நம்பி வாக்களிச்ச சனங்களுக்கும் போரில பாதிக்கப்பட்டிருக்கிற சனங்களுக்கும் இந்தப் போராட்டத்தில ஈடுபட்டு இண்டைக்கு நிர்க்கதியாக நிக்கிற சனங்களுக்கும் ஒரு துரும்பு நன்மையும் கிட்டாது.

கள்ளத்தமிழ்த்தேசியவாதிகளின் அரசியற் குணமே இப்பிடித்தான்.

சனங்களை ஏமாற்றி ஏமாற்றித் தங்களைப் பெரிய புனிதர்களாகவும் தமிழ்த்தேசியவாதிகளாகவும் காட்டிக்கொண்டிருக்கிற பரம்பரையில நீங்களும் சேர்ந்தியெண்டதால இதொண்டும் உங்கட மனசைத் தாக்காது.

ஆனால், நீங்கள் போட்டிருக்கிற இன்னொரு வேசமான ஆன்மீக வேசத்துக்கும் பூசுகிற திருநீற்றுக்கும் இது பொருந்துமோ... சிவசிவா.... விக்கினேஸ்வரா....!!!!!

எவன் பூரணமாக அகத்தூய்மை உள்ளவனோ அவனே உண்மையான பக்திமானாகிறான். மனத்தைப் பெருமளவுக்குத் தூய்மைப் படுத்துவதுதான் பக்தி ஏற்பட சிறந்த குணம்.

- சுவாமி விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஆனந்தக் கண்ணீருடன் காத்திருப்பு!

"இலக்கை நோக்கி நகரும் வரை தமிழர்கள் தூங்கிவிடக் கூடாது" என்று மீண்டுமொரு இடிமுழக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா.

இன்றிலிருந்து இன்னும் 102 நாட்களில் அரசுக்கெதிராகத் தொடங்கவிருக்கும் அகிம்சைப் போராட்டத்தைப் பற்றி ஏற்கனவே முழங்கியிருந்தார். "வடக்கு கிழக்கு இணைந்த இறைமையுள்ள ஓர் அரசு கிட்டும் வரை போராட்டம்; கொழும்புக்கு காலக்கெடு விதித்தது தமிழரசு" என்பதாக கடந்த 7ஆம் திகதி தமிழரசுக் கட்சிப் பத்திரிகையில் அந்த முழக்கம் வந்திருந்தது.

இப்போது தமிழர்கள் தூங்கக் கூடாது என்ற இந்த முழக்கம்! எவ்வளவு காலத்திற்குத் தூங்காமல் இருக்க வேண்டும்? இலக்கை நோக்கி நகர்வது என்றால் எந்தப் பக்கமாக நகர வேண்டும்? எவ்வளவு தூரத்தில் இருக்கிறது அந்த இலக்கு? என்னதான் அந்த இலக்கு?

தலைவர் வழக்கம்போல அது எல்லாருக்கும் தெரியுந்தானே என்று சொல்லாமல் விட்டுவிட்டார்.

இதற்கு முந்திய அவரது முழக்கத்திலிருந்து அது 'வடக்கு கிழக்கு இணைந்த இறைமையுள்ள ஓர் அரசு' என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்த 'வடக்கு கிழக்கு இணைந்த இறைமையுள்ள தமிழரசு' வருவதற்கு என்ன வழி? அதை யார் தருவார்கள் அல்லது யார் எடுப்பார்கள்? தமிழர்கள் எவ்வளவு காலத்திற்குத் தூங்காமல் இருந்தால் அந்த அரசைப் பார்க்க முடியும்? என்ன மாதிரியான அதிகாரங்கள் அந்த அரசுக்கு இருக்கும்?

எதுவும் தெரியவில்லை. தலைவருக்கும் தெரியவில்லை எங்களுக்கும் தெரியவில்லை. ஆனால் இலக்கை நோக்கி நாம் தூங்காமல் நகர்ந்து கொண்டிருக்க வேண்டிய தேவை மட்டும் தலைவர்களின் முழக்கங்களிலிருந்து நமக்குத் தெளிவாகப் புரிகிறது.

தமிழர்களுக்கான அந்த இறைமையுள்ள அரசின் வடிவம் என்ன? அதில் அடங்கியுள்ள அதிகாரங்கள் எவையெவை? அதற்குரிய திட்டம் என்ன? அது கிடைக்கக் கூடிய வழிமுறை என்ன? அது எப்படியிருக்கும்? போகும் பாதை என்ன? என்றெல்லாம் ஒரு மண்ணும் தெரியாமல் அந்த இலக்கை நோக்கி நகரும் வரை தமிழர்கள் தூங்காமல் இருக்க வேண்டும்.... என்ன கொடுமை சரவணா இது!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள தலைவர்கள் சேர்ந்து ஒன்றாய் ஒரு தீர்வைச் சொல்ல முடியவில்லை – அடையக் கூடிய தீர்வுத்திட்டத்தை மக்கள் முன் வைக்கமுடியவில்லை என்பதற்காக, தமிழர்கள் எல்லோரும் குருட்டாம்போக்கில் கைகளைக் காற்றில் துழாவியபடி தூங்காமல் இருக்க வேண்டுமா?

"இன்று எமக்குப் போடப்படும் மாலைகளும் பொன்னாடைகளும் எம்மை மேலும் போராட வேண்டும் என்றே தூண்டுகின்றன. போருக்குச் செல்வதற்கான ஒரு தூண்டுதலாகவே அவை அமைகின்றன. அதற்கான ஆடைகளாகவே இவற்றை நான் பார்க்கின்றேன்" என்றும் அந்த வரவேற்புக் கூட்டத்தில் பேசியிருக்கிறார் தலைவர்.

ஏற்கனவே தலைவர் மாவை அறிவித்தபடி ஜனவரி 1ஆம் திகதி முதல் போர்க்களத்தில் குதிக்கும் அவரது சங்கற்பத்தில் எந்த மாற்றமும் இராது என்று அறியும்போது புல்லரிக்கிறது. எப்படியும் அடுத்த சித்திரைப் பிறப்புக்கு இறைமையுள்ள தமிழரசின் குடிமக்களாக நாமிருப்போம் என்பதை நினைக்க ஆனந்தக் கண்ணீர் மல்கிறது.

- ஆசிரியர்

# ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்தை மகிழ்ச்சிப்படுத்தாது

## – அத்துரலிய ரத்னதேரர் ஆருடம்

அரசாங்கம் மகிழ்ச்சியடையக் கூடிய தேர்தல் முடிவுகள் ஊவாவில் கிடைக்காது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தமது கட்சியின் கொள்கை குறித்து சரியாக செவிகொடுத்து அறிந்து கொள்ளவில்லை

அரசாங்கத்திடம் ஜாதிக ஹெல உறுமய முன்வைத்த யோசனைகள் தொடர்பில் எந்த முனைப்புகளையும் காணமுடியவில்லை.

தேர்தல் பிரசாரங்களில் இருந்து நாங்கள் ஒதுங்கியிருந்த போதிலும் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கப் போவதில்லை.

தேவையான விடயங்கள் பற்றி நாம் பேசுவோம். அதற்காக குரல் கொடுப்போம்.

ஊவா தேர்தல் முடிவுகள் பற்றி இப்போதே எம்மால் எதிர்வுகூறமுடியாது. அது இரகசியமான தேர்தல். மக்கள் தமது பொறுப்பை நிறைவேற்றுவார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி (A.R.V) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை அறிவித்துள்ளது. இவ்வளர்ப்பு நாய்களுக்கான உரிமக்கட்டணமாக 20 ரூபா செலுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் திருநகர் மாணவர்படிப்பகம் மு.ப.9.00 - மு.ப.11.00, திருநகர் மாதா கோவிலடி மு.ப.11.30 - பி.ப.01.30 23ஆம் திகதி மு.ப 9.00 - மு.ப. 11.00 சொலமன் வீதி மு.ப. 11.30-பி.ப.01.30 கிறீன் பீல்ட் சனசமூக நிலையம் 24 ஆம் திகதி சோமசுந்தரம் வீதி அவனியூ மு.ப.09.00 - மு.ப.11.00 YMCA கச்சேரியடி மு.ப.11.30 - பி.ப.01.30, 25ஆம் திகதி கச்சேரி கிழக்கு ஒழுங்கை மு.ப.09.00 - மு.ப 11.00, காட்டுக்கந்தோர் ஒழுங்கை மு.ப.11.30-பி.ப. 01.30, 26 ஆம் திகதி சுவாட்ஸ் லேன் மு.ப.09.00 - மு.ப.11.00, சென் சாள்ஸ் ஆரம்பப் பாடசாலை மு.ப.11.30 - பி.ப.01.30, 29ஆம் திகதி யுவானியார் ஆலயம் மு.ப.09.00-மு.ப.11.00 கடற்கரை உயர்தொழில்நுட்பக் கல்லூரி வீதி மு.ப.11.30 - பி.ப.01.30, 30 ஆம் திகதி பழையபூங்கா வீதி சிறுவர் நீதிமன்றப்பகுதி மு.ப. 09.00-மு.ப.11.00, நடமாடும் சேவை மு.ப.11.30-பி.ப.01.30 ஆகிய இடங்களில் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும்.

## இலங்கையில் 100 வயதைக் கடந்த 144 முதியவர்கள்

(கொழும்பு)

இலங்கையில் 100 வயதைக் கடந்த 144 முதியவர்கள் வாழ்ந்து வருவதாக தேசிய முதியோர் செயலகம் தெரிவித்துள்ளது.

செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இது தெரியவந்துள்ளது.

10 பிள்ளைகளுக்கும் மேல் பெற்ற தாய்மாரில் 75 வயதையும் தாண்டிய 100 இற்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றனர்.

இலங்கையின் மொத்த சனத் தொகையில் 11 வீதமானவர்கள் முதியவர்கள் எனவும், இந்த எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டில 23 வீதமாக அதிகரிக்கும் எனவும் தேசிய முதியோர் செயலகததின பணிப்பாளர் சுமிந்த சிங்கப்புலி தெரிவித்துள்ளார்.

# ஆசிரியரின் தாக்குதலில் மருத்துவமனையில் மாணவி

(வவுனியா)

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள சர்வதேச பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவரால் தாக்கப்பட்ட மாணவி வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள சர்வதேச பாடசாலையில் தரம்-4 இல் கல்வி பயிலும் மாணவி ஒருவர், ஆசிரியரால் கூறப்பட்ட மரக்கன்று ஒன்றைக் கடந்த புதன்கிழமை பாடசாலைக்கு எடுத்துச் செல்லவில்லை. இதனால் கோபமடைந்த ஆசிரியர் குறித்த மாணவியைப், பயில் மட்டையால் கன்னம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தாக்கியுள்ளார். இதனால் கழுத்துப் பகுதியில் உபாதை ஏற்பட்ட நிலையில் குறித்த மாணவி வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த ஆசிரியரால் பிறிதொரு மாணவனும் தாக்கப்பட்டு முதுகில் கண்டல் காயங்களுக்கு உட்பட்டு வவுனியா மடுக்கந்த ஆயுர்வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பாடசாலை அதிபர் தெரிவிக்கையில் மாணவி ஒருவர் கழுத்து நோ காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

மாணவர் தவறு செய்தமையால் ஆசிரியர் தண் டித்துள்ளார். அது தவறுதலாக பெரிதாக மாறிவிட்டது. மாணவர்களின் நன்மை கருதியே ஆசிரியர் தண்டித்தார். இது தொடர்பில் எமது பாடசாலை நிர்வாகம் கலந்துரையாடி முடிவெடுக்கும் என்றார்.

# வலைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிக்கவென ஒருதொகுதி வலைகள் நேற்று முன்தினம் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினால் எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் மானியம் பெற்று வந்த கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிக்கவே இவை எடுத்து வரப்பட்டிருந்ததாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் இவ்வாறு எரிபொருள் மானியம் பெற்று வந்த சுமார் 2300 கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டு அந்தப் பெறுமதிக்குரிய வலைகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் அனைத்து கடற்றொழிலாளர்களுக்குமான விநியோகத்திற்குரிய வலைத் தொகுதிகள் வந்து சேர்ந்ததும் அவை விரைவில் விநியோகிக்கப்படவிருப்பதாக யாழ்.மாவட்ட கடற்றொழில நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர், ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (பா)

## சிறுவர் பாதுகாப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் சிறுவர் பாதுகாப்பு முறையினை நெறிப்படுத்தும் செயற்றிட்டம் தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் வவுனியா பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

அண்மைக்காலமாக வட மாகாணத்தில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான முதற்கட்ட வேலைத் திட்டமாக இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ராஜினி திரணகம:

# தமிழர்களின் துயரத்தில் மறக்கமுடியாத அடையாளம்

டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து

துப்பாக்கிதாரி தனது கையிலிருந்த கைத்துப்பாக்கியை அவளது தலையை நோக்கி குறி வைத்தபோது அவள் தனது வெற்றுக் கரங்களால் தனது நெற்றியை மறைத்ததாக கண்ணால் கண்ட சாட்சிகள் தெரிவித்தார்கள். பாய்ந்து வரும் துப்பாக்கி ரவைகளைத் தடுக்க தனது வெறும் கரங்களை மட்டுமே கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கு எதிராக அவர்கள் அசாதாரணமான ஒரு கொடுமையை நடத்தியுள்ளார்கள். அவள் நிலத்தில் விழுந்த பின்னர், திரும்பவும் அவர்களைப் பற்றி விமர்சிக்க அவள் உயிரோடிருக்கக் கூடாது என்பதற்காக மேலும் இரண்டு ரவைகளை அவளது தலையில் சுட்டுள்ளார்கள். அவர்கள் மீது அத்தனை பரிவு காட்டி, அவர்கள் காயமடைந்தபோது சிகிச்சைகளை வழங்கிய அந்தப் பெண்மீது அவர்கள் கொஞ்சம்கூட கருணைகாட்டவில்லை.

**25 வருடங்களுக்கு** முன்பு, 1989 செப்டம்பர் 21இல் கலாநிதி. ராஜினி திரணகம, யாழ்ப்பாணத்தில் வைத்துக் கொல்லப்பட்டார். அவரது மரணத்தின்போது அவருக்கு 35 வயது. அவரது மரணத்தின் 25 வது வருட நினைவு தினம் வட மாகாணத் தலைநகரில் சில தொடர் நிகழ்வுகளுடன் அனுட்டிக்கப்படுகிறது.

1989ல் அவரது மரணத்தின் ஒரு மாதத்தின் பின் நடைபெற்ற நினைவுச் சடங்குகளின் பின்னர், ராஜினியின் மறக்கமுடியாத மரபுவழி நினைவு நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நடக்க இருப்பது இதுதான் முதல் முறை.

ஒரு நினைவஞ்சலிக் கூட்டம், யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில், இன்று (செப்டம்பர் 20) காலை 9.30 மணிக்கு நடைபெறுகிறது. பி.ப 2 மணிக்கு சமாதானம், ஜனநாயகம், மற்றும் சமூக நீதி ஆகியவற்றுக்கான ஊர்வலம் ஒன்று யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து ஆரம்பமாகி வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு சிறிய ஒன்றுகூடலுடன் நிறைவுபெறும். செப்டம்பர் 21, காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் "நீதியும் ஜனநாயகமும் மிகுந்த சமூகம்" எனும் தலைப்பின் கீழ் ஒரு கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து சைக்கிளில் வீடு திரும்பும்போது திருநெல்வேலியில் வைத்து செப்டம்பர் 21, 1989இல் ராஜினி மிருகத்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டு 25 வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன என்பதை நம்புவது கடினமாக உள்ளது.

மருத்துவ பீடத்தில் அவர் உடற் கூற்றியல் பேராசிரியராக இருந்தார். நர்மதா மற்றும் சாரிகா என்கிற இரண்டு பெண் குழந்தைகளின் தாயான அவர் ஒரு மனித உரிமைகள் ஆர்வலராக, பெண்ணியல்வாதியாக, குறுகிய தேசியவாதத்தின் விமர்சகராக மற்றும் பொறுப்பற்ற யுத்த மனப்பான்மைக்கு எதிரானவராகவும் இருந்தார்.

ராஜினி, தென் மகாணத்தை சேர்ந்த சிங்களவரான புவியியல் விரிவுரையாளரும் அரசியல் ஆர்வலருமான தயாபால திரணகம என்பவரை திருமணம் செய்திருந்தார். தயாபால பின் தங்கிய நிலையில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடும் ஒருவராக இருந்தபடியால் அரசாங்கத்தின் கரங்களில் அகப்பட்டு பலகாலம் சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

1977 ஆகஸ்ட் 28இல் கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் நடப்பதற்கு மத்தியில் கொழும்பில் வைத்து எந்த வித விழாவும் இன்றி இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

தயாபால திரணகம, சில வருடங்களுக்கு முன்பு ராஜினி கொல்லப்பட்ட விதம் குறித்து ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அது தொடர்பான எடுத்தாள்கை கீழே தரப்பட்டுள்ளது.



"புலிகளுக்கும் இந்திய அமைதி காக்கும் படையினருக்கும் (ஐபிகேஎப்) இடையேயான ஆயுத மோதல்கள் அந்த நேரத்தில் அதன் உச்சத்தில் இருந்தது மற்றும் அது எந்த எதிர்ப்பையும் சகித்துக் கொள்ளாத சமயம். ராஜினிக்கு எல்.ரீ.ரீ.ஈ யுடன் சில தொடர்புகள் இருந்தன மற்றும் முன்பு அவள் காயமடைந்த தமிழ் போராளிகள் சிலருக்கு சிகிச்சைகள் செய்திருந்தாள். அப்போது ஆயுதம் ஏந்திய வீரர்களின் ஒரு சிறிய குழுவே அவர்களிடமிருந்தது. காலம் மாறியது. அவளது கொலையாளிகள் மருத்துவ பீடத்திலிருந்து அவள் வேலை முடிந்து வீடு திரும்பும் வழியில் அவளுக்காக காத்திருந்திருக்கிறார்கள். கொக்குவில்லில் அவளது வீட்டுக்கு அருகில் வைத்து அவள் 21 செப்டம்பர் 1989இல் பி.ப 4.00 மணியளவில் சுட்டு விழுத்தப்பட்டாள்".

"அவர்கள் அவளுக்கு பின்னால் வந்து அவளை பெயர் சொல்லி அழைத்துள்ளார்கள். அப்போதும் அவள் தான் அமர்ந்திருந்த மிதி வண்டியிலேயே அமர்ந்திருந்தபடியே திரும்பி அவர்களைப் பார்த்துள்ளாள். துப்பாக்கிதாரி தனது கையிலிருந்த கைத்துப்பாக்கியை அவளது தலையை நோக்கி குறி வைத்தபோது அவள் தனது வெற்றுக் கரங்களால் தனது நெற்றியை மறைத்ததாக கண்ணால் கண்ட சாட்சிகள் தெரிவித்தார்கள். பாய்ந்து வரும் துப்பாக்கி ரவைகளைத் தடுக்க தனது வெறும் கரங்களை மட்டுமே கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கு எதிராக அவர்கள் அசாதாரணமான ஒரு கொடுமையை நடத்தியுள்ளார்கள். அதுவும் அவள்



நிலத்தில் விழுந்த பின்னர், திரும்பவும் அவர்களைப் பற்றி விமர்சிக்க அவள் உயிரோடிருக்கக் கூடாது என்பதற்காக மேலும் இரண்டு ரவைகளை அவளது தலையில் சுட்டுள்ளார்கள். அவர்கள் மீது அத்தனை பரிவு காட்டி, அவர்கள் காயமடைந்தபோது சிகிச்சைகளை வழங்கிய அந்தப் பெண்மீது அவர்கள் கொஞ்சம்கூடக் கருணைகாட்டவில்லை. அந்த துப்பாக்கிச் சத்தத்தை கேட்ட அவளது இரண்டு மகள்மாரும் இந்தமுறை பாதிக்கப்பட்டது யாராக இருக்கும் என அதிசயப்பட்டார்கள்".

ராஜினி கொல்லப்பட்டபோது, ஆரம்பத்தில் அவரது கொலையாளிகள் யார் என்பதைப் பற்றி சில குழப்பங்கள் உருவாயின. சில பல்கலைக்கழக மாணவர்கள் இந்திய இராணுவத்துடனிருந்த தமிழ் ஆயுதக் குழுக்கள்மீது பழிகூறி ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ராஜினி மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விடயங்களுக்காக அடிக்கடி இந்திய அதிகாரிகளுடன் மோதிக் கொள்ளுவதை வழமையாக கொண்டிருந்தார்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் ராஜினியின் கொலைக்குப் பொறுப்பு என்பது பின்னர் தெளிவானது. ராஜினிக்கு தனது மரணத்தைப் பற்றிய ஒரு உள்ளுணர்வு இருந்து வந்துள்ளது, மற்றும் தனக்கு நெருக்கமான ஒருவருக்கு ஒரு கடிதத்தில் தனது கொலையாளிகள் யாழ் மண்ணின் கருவில் ஜனித்த மைந்தர்களாகத்தான் இருப்பர்கள் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

இரண்டரை தசாப்தங்கள் கழிந்து போனாலும் ராஜினிக்குத் தெரிந்தவர்கள் மத்தியில் இருந்து மறக்கமுடியாத அவருடைய நினைவுகளை அழிக்க முடியவில்லை. அவரது கொடூரமான கொலையை ஒருபோதும் மறக்கமுடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் பற்றி விரிவாகக் குறிப்பிடும் போதெல்லாம் அவருடைய பெயர் எப்போதும் முளைவிடும்.

நீண்டகாலம் இழுபட்ட இலங்கை போரில் துயரமான நிலைக்கு ஆளான பெண் என்கிற வகையில் அடிக் கோடிடப்பட்ட அவரது கொலை வழக்கமாக கவனத்தை திருப்புவது உண்டு. தமிழர் விடுதலைப் போராட்டம் மிகவும் பிழையான வழியில் சென்ற கதையைப் பற்றி விவாதிக்கும் போதெல்லாம் ராஜினி திரணகமவின் கொலை விடயம் ஒரு மேற்கோளாக கூறப்படுவதுண்டு.

குற்றம் இழைத்தவர்களுக்கு நெருக்கமானவர்கள் அந்தப் பழியை மற்றவர்கள் தலையில் கட்டிவைக்க பல முயற்சிகளைச் செய்ததுண்டு. இந்த எத்தனங்களுக்கு மாறாக அந்த நேரத்தில் அதை வெளிப்படையாகச் சொல்வதற்கு பலருக்கும் துணிவில்லாத போதும், பெரும்பாலான மக்களுக்கு இந்தக் கொலையை யார் செய்தார்கள் என்பது நன்கு தெரியும்.

யாழ் மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ராஜினியின் மாணவர்களான இரண்டு பேர்தான் இந்தக் கொலையில் ஒரு தீய பங்கினை வகித்தார்கள் என்பது இப்போது தெளிவாகி விட்டது. அவர்கள் தாங்களே சுயமாக துப்பாக்கி விசையை அழுத்தவில்லை, ஆனால் எல்.ரீ.ரீ.ஈயின் புலனாய்வுப் பிரிவின் அங்கத்தவர்கள் என்ற வகையில் அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் புலிகளின் தாக்குதல் அணியினரால் ராஜினி கொல்லப்பட்டார்.

அவர்களில் ஒருவர் பின்னாளில் எல்.ரீ.ரீ.ஈயினரின் மருத்துவப் பிரிவில் ஒரு மருத்துவராகக் கடமையாற்றினார். அவர்கள் இருவரும் இப்போது வெளிநாட்டில் அதாவது ஐரோப்பிய நாடொன்றில் உள்ளார்கள்.

ராஜினி கொல்லப்பட்டு கால் நூற்றாண்டுகள் ஓடிவிட்டன. அப்போது முதல் இப்போதைய நந்திக் கடலேரி வரை பல சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டன. இராணுவ ரீதியாக எல்.ரீ.ரீ.ஈ தோற்கடிக்கப்பட்டு விட்டது. ஆனால் தமிழ் மக்களின் நம்பிக்கைகளுக்கு பிரகாசமான ஒரு விடியல் இன்னமும் வரவேண்டியுள்ளது.

# ஆசிய அரசியல் கட்சிகளின் மாநாடு இலங்கையின் நன்மதிப்பை உயர்த்தும்

## பிரதி சபாநாயகர் நம்பிக்கை

ஆசிய அரசியல் கட்சிகள் மாநாட்டின் மூலம் இலங்கையின மதிப்பு மேலும் உயரும் என நாடாளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

வெகுசன ஊடக மற்றும் தக்வல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,ஆசிய அரசியல் கட்சிகள் சர்வதேச மாநாட்டின் 8 ஆவது பொதுச் சபை மாநாடு நேற்று முன்தினம் முதல் நாளை வரை நடைபெறுகின்றது. ஆசியான் சமூகத்தை கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் நடைபெறும் ஆசியான் சர்வதேச அரசியல் கட்சிகளின் மாநாட்டில் இலங்கையிலிருந்து இலங்கை சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசிய கட்சி உட்பட 33 நாடுகளின் 300 பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

கொழும்பு தாமரை தடாகத்தில் இடம்பெறும் இம்மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விசேட உரையை ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.நடைபெறுகின்ற இந்த சர்வதேச மாநாட்டின் மூலம் இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகள், சமூக மனிதஉரிமைச் செயற்பாடுகள், என்பவற்றை வெளிநாடுகளுக்கு தெளிவாக சுட்டிக்காட்ட முடியும். அத்துடன் ஏனைய ஆசிய நாடுகளுடனான பொருளாதார சமூக அரசியல் தொழில்நுட்ப உறவு முறைகளையும் வெளியுலகிற்கு தெளிவாக எடுத்துக்காட்ட முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# புதிய தூதுவர் நியமனம்



பொட்ஸ்வானாவுக்கான புதிய இலங்கைத்தூதுவராக நாட்டின் முன்னணி வர்த்தகத்துற்ற நிபுணர் ஜயசிறி சில்வா பொட்ஸ்வானா அரசாங்கத்தினாலும் வெளிவிவகார் அமைச்சினாலும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ நியமனக்கடிதம் இலங்கை அரசினாலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினாலும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நியமனம் செய்யும் நிகழ்வு நாட்டிலுள்ள முன்ணனி வர்த்தக ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு பொட்ஸ்வானாவின் புதுடில்லிக்கான உயர் ஆணையாளர் லெசேகோ எதேல் மொற்ஸுமி யால் தலைமை தாங்கப்பட்டது. தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் பல விருந்தினர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்துங்கள்



சீனாவுடனும் ஜப்பானுடனும் அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

உடன்படிக்கைகளின் மூலம் எந்தெந்த துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளன என்பது புற்றி தெளிவுபடுத்தப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

சீனா, ஜப்பான் தலைவர்கள் இலங்கையில் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகள் பற்றி கட்சிக்கு தெரியாது.

இந்த உடன்படிக்கைகளின் மூலம் பொருளாதாரத்திற்கு கிடைகக்கும் நன்மை என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

தொடர்பாடல் துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் ஒருவருக்கு இரண்டு கைத்தொலைபேசிகள் இருக்கின்றன. நிலையில் தாமரைத்தடாக அரங்கங்கள் எதற்காக அமைக்கப்பட்டன?

இதனை விடவும் பாரிய பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை.

நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் சுயாதீனமானதாக இருக்க வேண்டும்.

நாட்டின் மொத்த சீனித் தேவையில் 5வீதம் கூட உற்பத்தி செய்யப்படுவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளர்.

# நாட்டின் அரசியல் பொறிமுறையில் அடிப்படை மாற்றம் அவசியம்

## ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை



நாட்டின் அரசியல் பொறிமுறைமையில் அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார். அண்மையில் மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நாடாளுமன்றில் 225 பேர் அங்கம் வகிக்கின்றோம். இதில் 94 பேர் கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சையில் சித்தியெய்த தகுதியில்லாதவர்களாக இருக்கின்றார்கள்.

மேலும் 142 பேருக்கு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்த தகுதியில்லாதவர்களாக இருக்கின்றார்கள்.

சாதாரண தரம், உயர்தரம் ஆகியன ஒருவரின் புத்தி கூர்மையை மதிப்பீடு செய்யும் ஒரே அளவுகோல் அல்ல என்ற போதிலும், யதார்த்தத்தில் உயர்தர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாதவர்களே இருக்கின்றார்கள்.

இவ்வாறானவர்களே நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தீர்மானங்களை எடுக்கின்றார்கள்.

இன்று முகநூல் ஓர் முக்கியமான தொடர்பாடல் சாதனமாக மாற்றமடைந்துள்ளது.

இதில் இலங்கை அரசியல்வாதிகள் தொடர்பில் வெளியாகும் கருத்துக்களே அரசியல்வாதிகளின் நிலைமை குறித்து அறிந்து கொள்ள போதுமானது..

அரசியல்வாதி என்றாலே கொள்ளை, கொலை, பாலியல் வன்முறைகளில் ஈடுபடுபவர் என்ற ஓர் பிழையான நிலைப்பாடு மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்.

நீலம், சிவப்பு நிற அரசாங்கங்களுக்கு பதிலாக பச்சை அரசாங்கமொன்று வந்தாலும் இந்த நிலைமையை மாற்ற முடியாது.

ஏனெனில், பச்சை, அரசாங்கம் வந்தாலும் மோசமான அரசியல்வாதிகளே இதில் வந்து இணைந்து கொள்வார்கள்.

கட்சி மாறும் அரசியலில் ஈடுபட்டவர்கள் வரலாற்றுக் காலம் முதல மிக மோசமான விளைவுகளை சந்தித்துள்ளனர் என்றார்.

## – இலங்கை மத்திய வங்கியால் –

# சமூக பொருளாதார தரவு புத்தகம் வெளியீடு




2014 ஆம் ஆண்டின் நாட்டின் சமூக பொருளாதாரத் துக்கான 37 ஆவது தரவு வெளியீட்டு புத்தகம் அண்மையில் மத்திய வங்கியால் வெளியிடப்பட்டது.

87 புள்ளிவிபர அட்டவணைகளையும், 12 வரைபடங்களையும் தற்போது நிலவி வரும் சமூக பொருளாதார நிலைமைகளின் தகவல்களையும், மனித வளங்களையும், தேசிய கணக்கீட்டு விபரங்களையும், விவசாயம், கைத்தொழில், பொருளாதார சமூக உட்கட்டமைப்பு வசதிகள், விலைகள் ஊதியங்கள், வெளிநாட்டு வியாபாரம், சுற்றுலாத் துறை, வெளிநாட்டு நிதியமைப்பு, நிதித்துறை வாரியத்தகவல், ஆகிய விடயங்களை தன்னகத்தே கொண்டு இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் சார்க் அமைப்பின் தென் கிழக்காசியாவின் சமூக பொருளாதார தரவுகளினையும் இந்த வெளியீட்டில் பெற்றுக் கொள்ள முடியும்.

கொள்கை வடிவமைப்பாளர்கள், ஆய்வாளர்கள், நிறுவநர்கள், தொழில் சார்ந்தவர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் இந்தத் தரவுகளடங்கிய வெளியீடு பயனுள்ளதாக அமையும். இந்த தரவுக்ளடங்கிய புத்தகத்தினை மூன்று மொழிகளிலும் பெற்றுக் கொள்ள முடியும். ஆங்கில மொழி வடிவமொன்றின் விலை 100 ரூபாவும், தமிழ் மற்றும் சிங்கள தரவுப்புத்தகத்தின் விலை 40 ரூபாவாகவும் விற்பனை செய்யபபடுகிறது.

புத்தகத்தினை பெற்றுக் கொள்ள கொழும்பு சதாம் வீதி மத்திய நிலைய கட்டடத்தொகுதி, மற்றும் ராஜகிரிய ஜயவர்த்தனபுர மாவத்தை வங்கிக் கற்கைகளின் மையத்திலும் பெறலாம். மேலும் மாகாண அலுவலங்களான மாத்தறை, மாத்தளை, அநுராதபுரம், திருகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள முன்ணனி புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மொத்த ஏற்றுமதி வருவாய் அதிகரிப்பு

நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாய் யூலை மாதத்தில் மட்டும் 11.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது 955 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமான அதிகரிப்பினை சுட்டிக்காட்டுகிறது.

2014 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ஏற்பட்ட வளர்ச்சி 15.9 சதவீதமாக உள்ளது அவற்றுள் 11.1 வீதம் யூலை மாத வளர்ச்சியை சுட்டிக்காட்டுகிறது. அனைத்து துறைகளினதும் பங்களிப்பு இவ் வருமான அதிகரிப்புக்கு பெரிதும் உதவியது.

அவற்றுள் துறைகள் ரீதியான பங்களிப்பே இவ் அதிகரிப்புக்கு பெரிதும் உதவியுள்ளது. மேலும் ஆடைத்தொழிற்சாலைகளின் பங்களிப்பு, உயர்நிலை வகித்ததுடன், இறப்பர் உற்பத்தி பொருட்களினதும் கேள்வி அதிகரித்து இத்துறை சார்ந்த வருமானத்திற்கு பெரிதும் உதவியுள்ளது.

எரிபொருள் மற்றும் வானூர்தி எரிபொருள் பெற்றோலிய உற்பத்தியில் பெருவளர்ச்சியினை காட்டி நிற்கிறது. மேலும் இந்தியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு வைரம், மாணிக்கற்கள் ஏற்றுமதி செய்வதன் மூலம் அவற்றின் ஏற்றுமதி வருமானமும் அதிகரித்துள்ளது.விவசாயத்துறையின் ஏற்றுமதி வருமானத்தில் தெங்கு உற்பத்தி, தேயிலை உற்பத்தி, கடலுணவு உற்பத்தி என்பன முக்கிய இடம் வகித்துள்ளன.

# ஏபோலா தாக்கத்தை தடுக்க ஆபிரிக்க நாடுகளுக்கு நன்கொடை

(கொழும்பு)





மேற்கு ஆபிரிக்க பிராந்திய வலய நாடுகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பிராந்திய வலய நாடுகளில் பரவி வரும் எபோலா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இவ்வாறு நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கையுறைகளை ஜனாதிபதி நன்கொடையாக வழங்கியுள்ளார். உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதி கலாநிதி பிர்தோசியிடம் நேற்று முன்தினம் மாலை கொழும்பில் வைத்து, ஜனாதிபதி இந்த கையுறைகளை வழங்கியுள்ளார்.

எபோலா வைரஸ் காரணமாக ஆபிரிக்க நாடுகளில் 2500 பேர் கொல்லப்பட்டுள்ளனர். எபோலா வைரஸ் உலகப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அண்மையில் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





காரைநகர் பயிரிக் கூடல் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலய கோபுர கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. இதில் ஆலய குருக்கள் மற்றும் சிவாச்சாரியார்கள் கலசத்தை எடுத்துவருவதையும் கோபுரத்தில் கும்பாபிஷேகம் இடம்பெறுவதையும் காணலாம். (50)

# திருநீறு அணியும் கலாசாரமுறை இளையோரிடையே ஏற்படவேண்டும்

## சொற்பொழிவாளர் ஸ்ரீதரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"சைவசமய சின்னமாகிய திருநீற்றை நெற்றியில் அணிந்தால் நிம்மதி கிடைக்கும். எமது இளைய தலைமுறையினர் நீறணியத் தயக்கம் காட்டுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். அப்போதுதான் சைவம் வளரும்"

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி சரசாலை வடக்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய உற்சவ 7 ஆம் நாள் விழாவில் கலந்துகொண்டு "அம்பிகையின் அருள்" என்ற பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய கலா பூஷணம் இராசையா ஸ்ரீதரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிவஸ்ரீ.இரா.ஸ்ரீதரக்குருக்கள் தலைமையில் நிகழ்ந்த இந்த உற்வசத்தில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

"சைவசமயம் மிகத்தொன்மையானது இதை அனுட்டிக்கும் ஒவ்வொருவரும் பாக்கியசாலிகள் புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்த நாங்கள் எமது உடலில் உயிர் இருக்கும் போதே நல்லனவற்றையெல்லாம செய்து விடவேண்டும். உண்மை பேசி உத்தம வாழ்வு வாழ்கின்ற சைவமக்கள் ஒவ்வொருவரும் புண்ணியஞ் செய்தவர்கள். வீட்டில் உள்ள சாமி அறையில் ஒவ்வொருநாளும் ஒரு தேவாரமும் ஒரு புராணமும் பாடுகின்ற பழக்கத்தை வழக்கமாகக் கொண்டால். நன்மைகள் பெருகும். லட்சுமிகரம் உண்டாகும். இளைய தலைமுறையினர் தேவாரத் திருமுறைகளைப் பிழை இல்லாமல் பாடப்பழகவேண்டும். நமது நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய பாதையில் வாழ்க்கை வண்டியை ஓடவிடவேண்டும்.

பத்து மாதங்கள் சுமந்து பெற்ற தாயை வணங்கவேண்டும். தந்தையை மதிக்க வேண்டும். பாடஞ்சொல்லித்தந்த குருவைக் கும்பிடவேண்டும். பெரியோரைக் கனம்பண்ண வேண்டும்

ஆலயத்திருத்தொண்டு செய்வதன் மூலமே நாங்கள் ஆன்மஈடேற்றங் காணமுடியும். ஒவ்வொரு நாளும் ஆலய வழிபாடு செய்தால் ஆனந்த வாழ்வு தானாகவே எம்மை வந்தடையும் என்றார்.

மங்கள இசை முழங்க, அடியார்கள் கற்பூரச்சட்டி ஏந்தி வர அம்பிகை திருவீதி வலம் வந்த அருட்காட்சியுடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

# பாராட்டு விழா

(தென்மராட்சி)

தென்மராட்சி கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் இணைந்து நடாத்தும் பாராட்டு விழா எதிர் வரும் 25 ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தருக்கே விழா இடம்பெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் ஜெ.ஜெ.சி.பெலிசியன் பிரதேச செயலர் அஞ்சலிதேவி சாந்தசீலன் சிறப்பு விருந்தினர்களாக உதவிப்பிரதேச செயலர் றஞ்சனா நவரட்ணம், பிரதித் திட்டப்பணிப்பாளர். இரஞ்சினி ரகுநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினராக திருமதி.சுனித்திரா சுதாகர் கலந்து கொள்ளவுள்ளார். (14)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துண்டி இந்து மயானம் இந்துஇடுகாடு பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்புத்துறை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து பொதுச் சபை உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (எஸ்.பி)

# நுழைவாயில் திறப்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் வரணி பிரதேச வைத்தியசாலைக்கு நுழைவு வாயில் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இன்று சனிக் கிழமை காலை 9 மணிக்கு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் திறந்து வைக்கப்படவுள்ளது. இவ் நுழைவாயில் வரணி இடைக்குறிச்சி பகுதியைச் சேர்ந்த அன்பர் ஒருவரால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

மேலும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் அம்புலன்ஸ் கராச் திருத்தமும் நடைபெற்றுள்ளது.

இதுவரை காலமும் அன்புலன்ஸ் வண்டி உரிய கராச் இல்லாது இருந்து. தற்போது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. (14)

# டெங்கு தொற்று

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் ஒருவர் டெங்கு தொற்றுக்கு ஆளாகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். சிவன் பண்ணை வீதி, யாழ்.நகரில் இருந்தே இவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

# திருநாவுக்கரசின் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருநாவுக்கரசு எழுதிய "தேசிய இனப்பிரச்சின்னக்கு தீர்வின்றி இலங்கைக்கு விடிவில்லை" என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலைய கேட்போர் கூடத்தில், மாலை நடைபெற்ற இந்நிகழ்வில், நூலாசிரியர் வ.திருநாவுக்கரசு அருட்தந்தை ஜெயசீலன் அடிகளாரிடம் முதற் பிரதியினை வழங்கி வெளியிட்டு வைத்தார்.



இந்நிகழ்வில், வடமாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் மற்றும் சமூக ஆர்வலர்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ,25)

# முரசின் இன்றைய பலன்



(20.09.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 04 ஆம் திகதி.
சித்தம் / துவாதசி.
பூச நட்சத்திரம் மு.ப. 09.10 வரை. பின் ஆயிலியம்.
இராகு காலம் 09.03 - 10.33 வரை. சுபநேரம 03.03 - 04.33 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குடும்பத்தின் எதிர்கால முன்னேற்றம் கருதி சேமிக்கும் மனப்பாங்கு ஏற்படல், பரீட்சைச் சித்தியினால் அதிகார பூர்வமான பதவி வந்தடைதலும் பொறுப்புக்களை ஏற்கும் நிலைபாடு உருவாதல். |
| ரிஷபம் | தர்மம் கேட்டுவந்தவர் மேல் இரக்கப்பட்டதன் விளைவு கைப்பேசி திருட்டுப்போதல்,. |
| மிதுனம் | சட்டவிரோத பொருட்களை கொண்டுசென்றவேளை பிடிபட்டுவிடல், நோய் குணமடைவதால் மீண்டும் பணிக்குச் செல்ல ஆயத்தமடைதல், அதிர்ஷ்ட இலாபச்சீட்டுக்களினால் யோகமுண்டு. |
| கடகம் | தந்தையின் கருணையால் சீதனப்பிரச்சினை தீர்வுக்கு வந்ததால் குடும்பம் ஒன்று சேரல், தாயாரின் தேக நிலையினால் கவலையுற்று பயணத்தைத் தொடராது விடல். |
| சிம்மம் | வியாபாரப் போட்டியினால் வாடிக்கையாளர்களைக் கூவி அழைத்தவேளை முரண்பாடு ஏற்படல், எதிர்பாராது ஏற்பட்ட சுபகாரியம் கொண்டாட பணம் சேகரிக்க நண்பர் குழாமை நாடுதல். |
| கன்னி | தம்பதியர் மத்தியிலே முரண்பாடு ஏற்பட்டு மோதலுக்கு தயாரானபோது அயலவர் தலையிடல், வியாழ கோசரம் அனுகூலமாக இருக்கின்றமையினால் ஒப்பந் தத்தில் கைச்சாத்திடல். |
| துலாம் | அசாதாரண வேகம் காரணமாக பயணிகள் அச்சத்துடனும பதகளிப்புடனும் பிரயாணத்தை மேற்கொள்ளல், போலி நகைகள் எனச்சந்தேகம் ஏற்படல். |
| விருச்சிகம் | கைவிட்டிருந்த வெளியூர் பயணத்தை மீண்டும் ஆரம்பிக்க மனம் ஆதங்கப்படல். |
| தனுசு | பழைய பகைமையை மறந்து உறவு கொண்டாட வரும் சகோதரருடன் வாக்குவாதம் செய்வதைக்கைவிடவும், பொறுப்பின்றி எந்தப்பொருளையும் கொடுத்துப்பின் தீராத துயரினை தக்கவைத்துவிடாதீர்கள். |
| மகரம் | உரியவேள்ளைக்கு மனைக்கு வராதபிள்ளையை நினைத்து அச்சமும் பதகளிப்புமடைதல், பொறுமை சகிப்புத்தன்மை முரண்பட வந்தவர் மீது காட்டியதால் ரகளை அற்றுப்போதல். |
| கும்பம் | அறிமுகமில்லாத நபர்களின் தொடர்பினை முளையிலேயே கிள்ளிவிடுவதினால் துயர்விலகும், மனக்கவலையை விலக்கி செயலாற்ற முனையுங்கள். |
| மீனம் | காரிய சித்தி ஏற்படாது விடல், உதவிக்கேட்டு வந்தவரின் பரிதாப நிலையைக்கண்டு மன்னிப்புக்கேட்டு மனங்குளிர வைத்தல். |

# ஓய்வெடுக்க முடிவு




(பீஜிங்)

ரென்னிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து சிந்திப்பதாகவும், இது குறித்து இறுதி முடிவை விரைவில் வெளியிடுவேன் எனவும் சீனாவின் ரென்னிஸ் நட்சத்திரம் லிநா தெரிவித்துள்ளார்.

ரென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையரில் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை ருசித்த ஒரே ஆசிய வீராங்கனை என்ற பெருமைக்குரியவர் சீனாவின் லீநா. இவர் 2011ஆம் ஆண்டு பிரெஞ் ஓப்பனையும், 2014ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய ஓப்பனையும் வென்றுள்ளார்.

உலக தரவரிசையில் 6ஆவது இடம் வகிக்கும் லீ நா, அடிக்கடி கால் முட்டி காயத்தால் அவதிப்படுகிறார். யூன் மாதம் விம்பிள்டனில் தோல்வி கண்ட பின் காயத்தால் அவர் எந்த வித போட்டியிலும் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில் லீ நா சர்வதேச ரென்னிஸ் போட்டியிலிருந்து விடைபெற முடிவு செய்திருப்பதாக சீனாவிலுள்ள ஊடகங்கள் நேற்று முன்தினம் பரபரப்பான செய்திகளை வெளியிட்டன. இது பற்றி அவர் விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கவிருப்பதாகவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.




# சச்சினிடம் ஹோலி பயிற்சி

(மும்பை)

இங்கிலாந்துடனான கிரிக்கெட் தொடரில் ஒரே வகையான பந்துவீச்சிற்கு ஆட்டமிழந்து ஏமாற்றமளித்த இந்திய அணியின் ஹோலிக்கு முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் சிறப்பு பயிற்சி அளித்தார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான கிரிக்கெட் தொடரில் ஹோலியின் ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. இதனால் அவர் கடும் விமர்சனத்துக்குள்ளானார்.

இங்கிலாந்து தொடரில் ஹோலி ஸ்லிப் மற்றும் விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

மேலும் செய்த தவறை மீண்டும் மீண்டும் செய்தார். இந்த நிலையில் ஹோலி, தான் இங்கிலாந்து செய்த தவறை திருத்த வேண்டும் என்று டெண்டுல்கரிடம் கோரிக்கை விடுத்தார். இதை டெண்டுல்கரும் ஏற்றுக் கொண்டார். மும்பை கிரிக்கெட் சங்கத்தில் உள்ள உள்விளையாட்டு அரங்கில் ஹோலிக்கு துடுப்பாட்ட ஆலோசனைகளை வழங்கினார். குறிப்பாக ஓப் ஸ்டம்புக்கு வெளியே செல்லும் பந்தை எப்படி ஆடுவது குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

மேலும் டெண்டுல்கர் நடுவர் பகுதியில் நின்று ஹோலியின் துடுப்பாட்டத்தை உற்று கவனித்தார். அவர் செய்த தவறை திருத்தினார். இந்தப் பயிற்சியை அவர் சில மணி நேரம் அளித்ததோடு மேலும் 2 அல்லது 3 நாட்கள் இப்பயிற்சி தொடரும் என்றும் தெரிகிறது.

CHAMPIONS LEAGUE TWENTY 20

## இன்றைய ஆட்டம்

டொல்பின்ஸ் எதிர்

பேர்த் ஸ்கார்ச்சர்ஸ்

இடம்: மொகாலி

நேரம் : இரவு 8.00 மணி

## களத்திற்கு வெளியில்...

மைக்ஸ்வெல், திசர பெரேரா ஆகியோரின் ஆட்டம் அற்புதமாக இருந்தது. இதுபோன்ற ஆட்டம் ஒரு அணி இக்கட்டான சூழலில் இருந்து மீண்டுவர உதவும். ஹோபர்ட் அணி சிறந்த அணியாகும். அவர்கள் தோற்றாலும் கடும் சவாலாக இருந்தனர். அனுரீத்சிங் காயம் காரணமாக ஐ.பி.எல். போட்டியில் விளையாடவில்லை. இந்த போட்டியில் அவரது பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. நாங்கள் எங்களது திறமையான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தவில்லை. வரும் ஆட்டங்களில் அதைக் காட்டுவோம்.

**ஜோர்ஜ் பெய்லி (பஞ்சாப் கப்டன்)**

பஞ்சாப் அணிக்கு திரும்பியிருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. சர்வதேச போட்டிகள் இருந்ததால் ஐ.பி.எல். தொடரில் விளையாட முடியாமல் போய் விட்டது. ஒவ்வொருவரும் என்னிடம் பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் சிறந்த ஆட்டத்தை எதிர்பார்க்கிறார்கள். அதை எல்லா வேளைகளிலும் அளிப்பது கடினம் என்பதை எவரும் புரிந்துகொள்வதில்லை.

**திசர பெரேரா (பஞ்சாப் வீரர்)**

# தனிச் சிறப்பு வாய்ந்த வீரர் டோனி ஆஸி. முன்னாள் வீரர் பாராட்டு

(சிட்னி)

டோனி ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த வீரர் என்றே நான் கருதுகிறேன். டோனி போன்ற வீரர்கள் எப்போதும் அபாயகரமானவர்கள், இவரைப்போன்றவர்கள் தலைமுறைக்கு ஒரு முறையே உருவாகக் கூடியவர்கள் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சில் மைக்கல் காஸ்பரோவிச் தெரிவித்துள்ளார்.


இந்திய அணியின் தற்போது அங்கம் வகித்திருக்கும் வீரர்கள் நிச்சயம் திறமை மிக்கவர்கள். அவர்கள் அவுஸ்ரேலியாவில் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்களே. இதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

இந்திய அணியை அதன் சமீபத்திய தோல்விகளைக் கொண்டு சாதாரணமாக அவுஸ்ரேலியா எடைபோட்டால் அது மிகப்பெரிய தவறாகவே போய் முடியும். ஆனால் பயிற்சியாளர் டரன் லீமன், கப்டன் கிளார்க் அத்தகைய தவறுகளைச் செய்யக் கூடியவர்கள் அல்ல.

1998ஆம் ஆண்டு, மற்றும் 2001ஆம் ஆண்டுகளில் நான் அணியில் இருந்த போது இந்திய ஆடுகள நிலைமைகளுக்கு அவுஸ்ரேலிய வீரர்களால் சிறப்பாக செயற்பட முடியவில்லை. 2004ஆம் ஆண்டுதான் நாங்கள் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்த முடிந்தது. அது போல் இந்திய வீரர்கள் அவுஸ்ரேலிய ஆடுகளம், பந்து வீச்சு, களத்தடுப்பு ஆகியவற்றிற்கு எதிராக தங்களைத் தகவமைத்துக் கொள்ளுதல் அவசியம்.

எப்போதும் சொந்த ஊரில் ஆடுவது போல் எல்லா மைதானங்களிலும் ஆடி விட முடியாது, பைக்.'.புட்டில் ஆடுவதில் பயம் காட்டாமல் இருப்பது அவுஸ்ரேலிய ஆடுகளங்களில் அவசியம்.

ஜோன்சன் உள்ளிட்ட பந்துவீச் சாளர்களை அவுஸ்ரேலியாவில் எதிர்கொள்வது அவ்வளவு எளிதல்ல, ஆனால் இந்திய துடுப்பாட்டத்தில் திறமை இருக்கிறது. அவர்களது அணுகுமுறையைப் பொறுத்து அந்தத் தொடர் அமையும். அவர்கள் இங்குள்ள சூழ்நிலைக்குத் தக்கவாறு தகவமைத்துக் கொண்டால் அவுஸ்ரேலிய அணிக்கு நெருக்கடி கொடுக்க முடியும். அப்படிச் செய்தால் முடிவுகள் ஆச்சரியமளிக்கும் விதத்தில் அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# புற்றுநோய்

.புற்றுநோயினால் தான் மீண்டும் பீடிக்கப்பட்டுள்ளதாக நியூசிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மார்ட்டின் கூவ்ரே தெரிவித்துள்ளார்.


புற்றுநோயினால் பீடிக்கப்பட்டிருந்த மார்டின் கூவ்ரே கடந்த ஆண்டு அதில் இருந்து மீண்டிருந்தார்.

எனினும் தற்போது மீண்டும் தமக்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாக சமூக வலைத்தளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1982ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு வரை நியூசிலாந்து அணியை பிரதிநிதித்துவப்படுத்திய மார்டின் கூவ்ரே 77 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

மார்டின் நியூசிலாந்து அணிசார்பாக அதிகளவு சதங்களைப் பெற்ற வீரராகவும் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

# வென்றது பஞ்சாப்



(சண்டிகர்)

சம்பியன் லீக் ருவென்ரி-20 தொடரின் முதன்மை சுற்று ஆட்டமொன்றில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.

சண்டிகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் ஹோபர்ட் ஹரிக்கேன்ஸ் அணியும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதின.

முதலில் ஆடிய ஹரிக்கேன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. மலிக் 27 ஓட்டங்களைப் பெற்றார். திசர பெரேரா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பஞ்சாப் அணி 17.4 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மைக்ஸ்வெல் 43, பெய்லி 34, திசர பெரேரா ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக திசர பெரேரா தெரிவு செய்யப்பட்டார்.

# இந்தோனேசியாவில் 18ஆவது ஆசிய விளையாட்டு

(இன்சியான்)

18ஆவது ஆசிய வியைாட்டுப்போட்டி இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்தாவில் நடாத்த வாய்ப்பிருப்பதாக ஆசிய ஒலிம்பிக் சபைத் தலைவர் சேக் அகமட் அல்-பஹாத் தெரிவித்துள்ளார். 18ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியை 2018ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்தாவில் நடாத்த நிர்வாகக்குழு நேற்று ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தோனேசியாவில் விளையாட்டை நடாத்துவதற்கான இறுதி முடிவை பொதுச்சபை இன்று ஒப்புதல் அளிக்கும் என்று நம்புகிறேன். முதலில் வியட்நாம் தான் தேர்வு செய்யப்பட்டது. அங்குள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தோனேசியாவிற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரம் எங்களுக்கு இருந்தாலும், குவைத்தில் உள்ள பொதுச்சபை தலைவர் வியாட்நாமிற்கு பதிலான மற்ற நகரத்தை தேர்வு செய்து அறிவிப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்குமுன் 1962ஆம் ஆண்டு இந்தோனேசியா ஆசிய விளையாட்டு விழாவை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 21ஆம் நூற்றாண்டின் சிறந்த வீராங்கனை




21ஆம் நூற்றாண்டின் முதல் சர்வதேச கிரிக்கெட் வீராங்கனை என்ற பெருமையை அயர்லாந்து வீராங்கனை கேபி லூயிஸ் பெற்றுள்ளார். 13 ஆண்டுகள் 166 நாட்களே நிரம்பிய கேபி லூயிஸ் சிரேஷ்ட கிரிக்கெட் அணிக்கு ஆடிய, 21ஆம் நூற்றாண்டில் பிறந்த முதல் கிரிக்கெட் வீராங்கனை ஆவார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக ருவென்ரி–20 கிரிக்கெட் சர்வதேச போட்டியில் இவர் அயர்லாந்துக்காக தன் முதல் போட்டியில் ஆடினார். இவரது முதல் போட்டி அபாரமாக அமையவில்லை. இவர் 5 ஓட்டங்கள்தான் எடுத்தார். தென்னாபிரிக்க மகளிர் அணிக்கு எதிராக அயர்லாந்து மகளிர் அணி படுதோல்வியைச் சந்தித்தது. அடுத்த போட்டியில் 12 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். அந்தப் போட்டியிலும் அயர்லாந்து மகளிர் அணி தோற்றது. இதற்கு முன்பாகவும் அவர் அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணிக்காக சில போட்டிகளில் விளையாடி னார். ஆனால் அந்தப் போட்டிகளுக்கு சர்வதேச தகுதி இல்லை. சிறிய வயதில் சர்வதேச கிரிக்கெட் ஆடிய சாதனை பாகிஸ்தானைச் சேர்ந்தது. இவரும் மகளிர் அணி வீராங்கனைதான். சஜிதா ஷா என்ற அந்த வீராங்கனை பாகிஸ்தானுக்காக முதல் சர்வதேச கிரிக்கெட்டை ஆடும்போது அவரது வயது 12 ஆண்டுகள் 171 நாட்களே. ஆகவே கேபி லூயிஸ் அதனை முறியடிக்கவில்லை. பாக். வீராங்கனை சஜிதா ஷா 2000ஆம் ஆண்டில் தன் முதல் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடினார். 1989ஆம் ஆண்டு சச்சின் டெண்டுல்கர் பாகிஸ்தானுக்கு எதிராக முதல் டெஸ்ட்டை ஆடும்போது 16 வயது. கேபி லூயிஸ் அதைவிடவும் 3 வயது முன்னதாக சர்வதேச கிரிக்கெட்டிற்குள் நுழைந்துள்ளார்.

சிறிய வயதில் டெஸ்ட் கிரிக்கெட்டிற்குள் நுழைந்த வீரர் என்ற சாதனையையும் பாகிஸ்தான் வைத்திருக்கிறது. அந்த அணியின் ஹசன் ராசா என்பவர் 1996ஆம் ஆண்டு சிம்பாப்வே அணிக்கு எதிராக முதல் போட்டியில் விளையாடும் போது வயது 14 ஆண்டுகள் 227 நாட்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இந்த வரிசையில் 21ஆம் நூற்றாண்டில் பிறந்து முதன் முதலாக சர்வதேச கிரிக்கெட்டிற்குள் நுழைந்த வீராங்கனை என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார் கேபி லூயிஸ்.

# வதுசனன், வினோத்குமார் ஜோடி கலக்கல் காலிறுதிக்கு முன்னேறியது சென்றலைட்ஸ்

## விளையாட்டுச் செய்திகள்



வதுசனன், வினோத்குமார் ஆகியோரின் இணைப்பாட்டத்தின் மூலம் யாழ். சென்றலைட்ஸ் அணி ஆறு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி சனி, ஞாயிறு தினங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் யாழ். சென்றல் மற்றும் சென்றலைட்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்றலைட்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய யாழ். சென்றலை் அணி ஜெரிக், டர்வின் ஆகியோரின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யாழ். சென்றல் அணி 30 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பாலேந்திரா 61, றோகான் குமார் 62 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெரிக், டர்வின் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 191 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி முதல் விக்கெட்டை விரைவாக இழந்து தடுமாறியது. இந்நிலையில் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த வினோத்குமார், வதுசனன் ஜோடி பொறுப்புடன் ஆடிய அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது. இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 120 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய செல்டன் அதிரடியில் கலக்கி அணியின் வெற்றியை உறுதி செய்தார். நிறைவில் சென்றிலைட்ஸ் அணி 27.3 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் வதுசனன் 61, வினோத்குமார் 44, செல்டன் நான்கு சிக்ஸர்கள் அடங்கலாக 28 ஓட்டங்களைப் பெற்றனர். இவ்வெற்றியின் மூலம் சென்றிலைட்ஸ் அணி காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இதேவேளை, இன்று நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணி திருநெல்வேலி சி.சி. அணியை எதிர்கொள்ளவுள்ளது. (எஸ்.பி.)

## மல்லாகம் ஆர்.டி.எஸ். 3 விக்கெட்டுகளால் வெற்றி

(அளவெட்டி)

கிசோவின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் மல்லாகம் ஆர். டி. எஸ். அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் வலி. வடக்கின் சமர் மென்பந்து கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டமொன்று கடந்த சனிக்கிழமை அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் அளவெட்டி மத்தி அணியும் மல்லாகம் ஆர்.டி.எஸ். அணியும்மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அளவெட்டி மத்தி அணி 16.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுதன் 20, கோகுலன் 22, சுயந்தன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜித் மூன்று, டன்சன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மல்லாகம் ஆர்.டி.எஸ். அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சிசோ 30, ஜெனா 18, ரமேஷ் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் காந்தசீலன், சுதன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (93)

## இன்று சைக்கிள் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் நான்காவது ஆண்டாக நடாத்தப்பட்டு வரும் பிரதேச செயலக 'பணியாளர்களுக்கிடையிலான அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் பூப்பந்தாட்டம், கரப்பந்து, வலைப்பந்து போட்டிகள் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளன. இப்போட்டி யாழ். மாவட்ட செயலகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு அதே இடத்தில் நிறைவடையும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதில் 15 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரச பணியாளர்கள் அனைவரும் பங்குகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 25,26ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## பொன்விழா வெற்றிக் கிண்ணம் உடுப்பிட்டி சிவகுமாரன் வசம்

(அல்வாய்)

அல்வாய் பாரதிதாசன் விளையாட்டுக்கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை உடுப்பிட்டி சிவகுமாரன் அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை அல்வாய் பாரதிதாசன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு ஐந்து பேர் கொண்ட இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யூகே அணியும் கூவில் தீபஜோதி அணியும் மோதின. இதில் கூவில் தீபஜோதி அணி 10-08 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி சிவகுமாரன் அணியும் மாதனை இளைஞர் அணியும் மோதின. இதில் சிவகுமாரன் அணி 11-10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் சிவகுமாரன் அணியும் கூவில் தீபஜோதி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சிவகுமாரன் அணி 35-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடரில் பங்குபற்றிய அனைத்து அணிகளுக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கிண்ணத்தை வென்ற உடுப்பிட்டி சிவகுமாரன் அணிக்கு எங்கள் வாழ்த்துகள். இது போன்ற போட்டித் தொடர்களை தொடர்ந்தும் நடாத்தத் திட்டமிட்டிருக்கின்றோம் என அல்வாய் பாரதிதாசன் விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர் போட்டியின் நிறைவில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

## விரைவில் எல்.பி.எல்.

(யாழ்ப்பாணம்)

எல். பி.எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டி யாழ்ப்பாணத்தில் விரைவில் நடைபெறவுள்ளது. அணிக்கு 8 பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி 8 ஓவர்கள் கொண்டதாக நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்கு பற்ற விரும்பும் அணிகளை 0773655261 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)






சிறுவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தும் முகமாக சீர் நிறுவனத்தினால் கிராமங்களில் உள்ள சிறுவர் கழகங்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது. இதன் முதற்கட்டமாக வவுனியா ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட சிறுவர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா கோமரசன்குளம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் முட்டி உடைத்தல், ஓட்டப் போட்டி மற்றும் வினோத உடைப் போட்டி போன்றவை நடாத்தப்பட்டன. இதில் முட்டி உடைத்தல் போட்டியில் வீராங்கனைகள் ஈடுபடுவதையும், பங்குபற்றிய சிறார் ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் காணலாம். (70)

# ஜே.வி.பி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாமல் போனது ஏன்?

11

– சுப்பராஜன் [வானவில் இதழ்]



மு.கார்த்திகேசன்



கே.டானியல்

வட பகுதிக் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் தலைமறைவானாலும், கட்சியை வடக்கில் ஸ்தாபித்த முன்னோடியான மு.கார்த்திகேசன் எங்கும் செல்லாது தனது நாச்சிமார் கோவிலடி வீட்டிலேயே தங்கியிருந்தார். அவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் 30 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராகப் பணி புரிந்து வந்ததாலும், யாழ்ப்பாண மக்களின் பெரும் மதிப்பைப் பெற்றவராக இருந்ததாலும், அவரை அணுகுவதற்கு பொலிசார் சஞ்சலப்பட்டனர்.

அதற்கு இன்னொரு காரணம், அந்த நேரத்தில் யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சராக (சுப்பிரிண்டன்) இருந்த எஸ்.சுந்தரலிங்கம் யாழ். இந்துக் கல்லூரியில் கார்த்திகேசன் மாஸ்டரிடம் கல்வி கற்றிருந்ததுடன், அவர் மீது பெருத்த மதிப்பும் வைத்திருந்தார். அதனால் சுந்தரலிங்கம் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைமையில் ஒரு குழுவை கார்த்திகேசனின் வீட்டுக்கு அனுப்பி அவரிடம் ஒரு வாக்குமூலத்தை மட்டும் பெற்றுக்கொண்டு அவரை விட்டுவிட்டனர்.

இத்தகைய ஒரு நெருக்கடியான சூழலிலும் கட்சியின் வட பிரதேசக் குழு, கட்சியின் மிக முக்கிய ஆதரவுத் தளங்களில் ஒன்றான மட்டுவிலிலுள்ள மானாவளைக் கிராமத்தில் கூடி அன்றைய நிலைவரங்கள் குறித்து ஆராய்ந்தது. அக்கூட்டத்தில் பொலிசாரால் கண்களில் தாக்கப்பட்ட எம்.குமாரசாமி உட்பட தலைமறைவாயிருந்த அனைத்து வட பிரதேசக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அங்கும் கூட கூட்டம் நடந்து கொண்டிருந்த வேளையில் அந்தக் கிராமத்தின் முக்கிய கட்சி உறுப்பினரான கே.சுப்பையா என்பவரைத் தேடி பொலிஸ் வந்ததாயினும், அவரையோ இதர கட்சித் தோழர்களையோ பொதுமக்கள் எவரும் காட்டிக் கொடுக்காமல் பொலிசாரைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

இந்த நேரத்தில் முக்கிய கட்சி உறுப்பினர்கள் சிலர் சில வேடிக்கையான நடவடிக்கைகளிலும் அந்த நேரத்தில் ஈடுபட்டனர். வட பிரதேசச் செயலாளர் வி.ஏ.கந்தசாமிக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்த ஒரு முக்கிய கட்சி உறுப்பினர் ஒருவர் பாதுகாப்புத் தேடி சோவியத் சார்பு கட்சிப் பிரமுகரான வி.பொன்னம்பலத்திடம் போயிருக்கிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அன்றைய அரசாங்கத்தில் அங்கம் வகித்த போதும், ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சியின் போது அக்கட்சிகளின் சிங்களப்பகுதி உறுப்பினர்களும் பெருமளவில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதனால் வி.பொன்னம்பலம் போன்ற அக்கட்சியின் வட பகுதித் தலைவர்களும் தமக்கு என்ன நடக்குமோ என்ற அச்சத்தில்தான் இருந்து கொண்டிருந்தனர். (இந்தக் கட்டுரையாளர் அந்த நேரத்தில் வவுனியாவிலுள்ள புதுக்குளம் கிராமத்தில் தங்கியிருந்த போது, அருகிலிருந்த சாஸ்திரி கூளாங்களம் கிராமத்தில் வசித்த சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் செ.பத்மநாதன் பொலிசாருக்குப் பயந்து இரவு நேரங்களில் தனது வீட்டில் படுக்காது சற்றுத் தள்ளியிருந்த தனது வயலிலுள்ள குடிலில் படுப்பதை அறிந்திருந்தார்)

இப்படியான சூழலில் தான் அந்த கட்சி உறுப்பினர் தனது அரசியல் எதிரியான வி.பொன்னம்பலத்திடம் பாதுகாப்புத் தேடிச் சென்ற அவலமும் நிகழ்ந்திருக்கிறது.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான எழுத்தாளர் கே.டானியல் பண்ணைக் கடற்கரையில் தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்திருக்கிறார்!

பிறகென்ன? அவர் மீன் பிடிப்பதற்கு முன்னர் கொக்கு மீனை "றாஞ்சுவது" போல டானியலை பொலிசார் றாஞ்சிச் சென்றுவிட்டனர். பின்னர் அவர் பல மாதங்கள் கழித்து முரசு மோட்டைத் தோழர்கள் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட நேரம்தான் அவரும் வெளியே வந்தார்.

(இதற்கு முன்னரும் டானியல் சம்பந்தப்பட்ட ஒரு விடயம் நடந்தது. "மீனவனின் பாதணிகள்" என்ற சீன விரோத சினிமாப்படம் ஒன்று யாழ்.றீகல் படமாளிகையில் திரையிடப்பட்டது. அதைத் திரையிட வேண்டாம் என புரட்சிகர சக்திகள் திரை உரிமையாளரிடம் கேட்டுக்கொண்டும், பிடிவாதமாகத் திரையிடப்பட்டது. எனவே இளைஞர்கள் சிலர் திரையரங்கு மீது கைக்குண்டு ஒன்றை வீசினர். அதனால் அப்படம் திரையிடுவது நிறுத்தப்பட்டது.

அன்றும் இப்படியான ஒரு சம்பவம் நடக்கப் போகிறது என்று தெரிந்திருந்தும், டானியல் அந்த நேரம் அத்திரைப்படத்தைப் பார்ப்பதற்குச் சென்று, பின்னர் பொலிசார் வந்தபோது ஒருவாறு அவர்களின் கண்களில் படாது தப்பி வந்துவிட்டார்)

இவ்வளவு நடந்திருந்தாலும், தென்னிலங்கையில் செய்தது போல பொலிசார் தமிழ் பகுதிகளில் தாம் கைது செய்த கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எவரையும் கொலை செய்யவில்லை. ஆனால் சித்திரவதை செய்தார்கள்.

அதற்கு ஒரு காரணம், இவர்கள் யாருமே ஜே.வி.பி. உறுப்பினர்கள் இல்லை என்பதும், அவர்களது கிளர்ச்சிக்கும் இவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதும் பொலிசாருக்கு நன்றாக தெரிந்திருந்ததுதான்.

இருந்தாலும் புரட்சிகர செயல்பாடுகளில் ஈடுபட்டு வந்த வட பகுதிக் கம்யூனிஸ்ட்டுக்களை அச்சுறுத்துவதற்கு பொலிசார் இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

ஆனால் பொலிசார் தேடிய பலர் அந்த நேரத்தில் தற்செயலாகப் பொலிசாரிடம் சிக்கியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

(தொடரும்)



# மொண்டிசோரி கல்வியில் என்ன இருக்கிறது?

– லதா ராமகிருஷ்ணன்

மொண்டிசோரி கல்விமுறை இத்தாலியில் பிறந்த மருத்துவர் மரியா மொண்டிசோரியின் பல வருட ஆய்வுகள், பணிகளின் பயனாய் உருவான கல்வித்திட்டம். கல்வி கற்றல் என்பது குழந்தைகளிடம் நேரிய ஆளுமையை, தன்மதிப்பை கட்டமைப்பதாக இருக்கவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்ட இந்தக் கல்விமுறை காலப்போக்கில் எப்படியோ மேல்தட்டுக் குழந்தைகளுக்கு மட்டும் எட்டுவதாகிவிட்டது.

அப்படி என்னதான் இருக்கிறது இந்த மொண்டிசோரி கல்வித்திட்டத்தில்...?

அன்றாட வாழ்க்கையின் செயல்முறைகளே மொண்டிசோரி கல்விமுறை. குழந்தைகளிடத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறுகிய காலத்துக்கு மட்டுமோ அல்லது வகுப்பறைக்குள் மட்டுமோ என்பதல்ல. 3 வயது முதல் 6 வயது வரையிலான குழந்தைப் பருவத்தில்தான் குழந்தையிடம் நல்ல குணங்கள் படியும் என்பதால் அந்தப் பருவத்தில் மிகவும் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார் மொண்டிசோரி.

உனக்கு வேண்டியதை நீயே தேர்ந்தெடுத்துக்கொள் என்று கூறும்போது குழந்தை தனக்குப் பிடித்ததைத் தேர்வு செய்து ஆர்வத்துடன் அதில் ஈடுபடுகிறது. வேலை செய்வதற்கு ஏற்ற சூழலைத் தருவதுடன் அதில் சில சவால்களும் இருக்கும்படி செய்தால் குழந்தை அதிலும் தன்னுடைய ஆற்றலுக்கேற்ற தேர்வுகளைச் செய்துகொள்கிறது.

நாலைந்து வழிகளில் ஏதோ ஒன்று என்றில்லாமல், படிப்படியாக வளர்ச்சி பெற்ற வழியையே தேர்ந்தெடுக்கிறது. இயல்பாகவே அது முன்னேற்றத்தை நோக்கி நகர்கிறது.

ஆரம்பப் பாடசாலைகளின் வகுப்பறைகளில்கூட இதை நாம் காணலாம். தான் செய்ய வேண்டிய வேலையைத் தானே தேர்வு செய்ததன் மூலம், குழந்தை தன்னுடைய செயலுக்குத் தானே பொறுப்பேற்றுக் கொள்கிறது.

அந்தப் பணியைச் செய்யும்போது தரையில் எதையாவது கொட்டினால் தானே துடைக்கிறது. பெரியவனாகும் போதும் அதே பொறுப்புணர்வு தொடருகிறது.

எதைச் செய்வது என்பதில் சுதந்திரம் இருந்தாலும் தேர்வு செய்த வேலையைச் செய்வதில் ஒழுக்கம் கடைப்பிடிக்கப்படுகிறது. அதாவது வேலையைத் தேர்வு செய்தபிறகு அதை நிறைவேற்றும் போது உடலியக்கமும் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது. குழந்தை ஒரு பொருளை அதற்குரிய இடத்தில் வைக்கக் கற்றுக்கொள்கிறது. இதன்மூலம் அடுத்தவர் அதை பயன்படுத்துவதும் எளிதாகிறது. இச்செயல், மற்றவர்களுக்காகக் கவலைப்படுவதையும், அடுத்தவர்கள் தேவையை உணர்ந்து செயல்படுவதையும் ஒருங்கே ஊட்டுகிறது.

குழந்தையிடம் படைப்பாற்றலை ஏற்படுத்த இதுவே சிறந்த வழி.

தானே செய்து பார்த்து, தவறுகளைத் திருத்திக்கொண்டு, வெற்றிகரமாக முடிப்பதே வேலையை மிகுந்த ஆர்வத்துடன் செய்வதற்கு குழந்தைகளை ஊக்கப்படுத்துகிறது. தானே கற்றுக்கொள்வது, தானே தவறைத் திருத்திக்கொள்வது என்பது குழந்தையின் ஆளுமையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

தானியங்களைப் போத்தலில் நிரப்ப வேண்டுமென்றால் அதை எந்த அளவுக்குச் சாய்க்க வேண்டும் என்பதை நேரடியாகச் செய்துபார்த்து குழந்தை கற்றுக்கொள்கிறது. இது திட்டமிட்டு, கவனத்துடன், கச்சிதமாகச் செய்துமுடிக்க உதவுகிறது.

"டம்ளரை பத்திரமாக வை" என்று குழந்தையிடம் கூறும்போது அதன் இறுதிப் பயன் என்ன என்று அதற்குத் தெரியாது. இருந்தாலும் சொல்லப்பட்டதுவரை அது சீராகவே செய்யும்.

ஒரு வேலையைச் செய்வதைப் போலவே அதை முடிப்பதும் முக்கியமானது. அதுவும் குழந்தைக்குப் பயனுள்ளது. இதனால் எடுத்த காரியத்தை இறுதிவரை செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் குழந்தைக்கு ஏற்படும். ஒரு வேலையை எடுத்துக்கொண்டால் அதை முற்றாக முடிக்க வேண்டும் என்ற விடாமுயற்சியை அது கற்றுத்தரும். இது அந்தக் குழந்தையின் ஆளுமைக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும்.

ஒரு வேலையைத் திரும்பத் திரும்பச் செய்வதால் ஆராய்ச்சி மனப்பான்மை ஏற்படும், விடாமுயற்சி வளரும், அனுபவம் கூடும். அனுபவம் அந்த வேலைக்கு மதிப்பைக் கூட்டும்.

மேலே குறிப்பிட்ட குணங்கள் அனைத்தையும் ஒரு வகுப்பறையில் நேரில் பார்த்துவிட முடியும். இவை ஆன்மிகரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவை. நேரில் பார்க்கும்போது நம்பக்கூட முடியாது. குழந்தைகள் வேலையைச் செய்யும்போது தாங்களே உணர்ந்து கொள்வதால் இந்த குணங்கள் அனைத்தும் அவர்களுடைய ஆளுமையில் அப்படியே ஐக்கியமாகிவிடும்.


மொண்டிசோரி இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றுவது வருவாய் தரக்கூடிய வேலையைக் குறிவைப்பதற்காக அல்ல. குழந்தைகளின் நலன்களுக்கானது.

# 13 SINS - பாவத்தின் வசீகரம்

- சுரேஷ் கண்ணன் -

"உங்களுக்கு ஒரு கோடி தருகிறோம். உங்கள் மகனை/மகளை உங்கள் கையினாலேயே கொன்று விடவேண்டும்" என்று யாராவது உத்தரவாதமான தொரு வாய்ப்புத் தந்தால் நம்மில் எத்தனை பேர் அதனை செய்ய தயாராக இருப்போம்?

"சீ.. வாயைக் கழுவு.. கோடி அல்ல.. எத்தனை செல்வத்தை கொண்டு வந்து குவித்தாலும் பெற்ற




பிள்ளையை யாராவது கொல்ல முன்வருவார்களா?" என்று ஆவேசத்துடன் நீங்கள் சீற்றம் கொண்டாலும் அதில் தவறில்லை..

ஆனால் உங்களை திட்டமிட்டு முறைப்படி இயக்கினால் உங்களை அவ்வாறு செய்ய வைக்க முடியும் என்பதே யதார்த்தமான உண்மை என்கிற ஆபத்தான நிதர்சனத்தை அதன் நிர்வாணத் தனத்தோடு சொல்கிறது 13 SINS திரைப்படம்.

புதையல் கிடைக்கும் என்கிற ஜோசியனின் வாக்குறுதியை நம்பி பெற்ற மகனை அல்லது மகளை நரபலி கொடுக்கத் தயாராக இருந்த பெற்றோர்களைப் பற்றிய செய்திகளை நாளிதழ்களில் வாசித்திருப்பீர்கள். வேறு நபருடன் வளமான வாழ்க்கை கிடைக்கிறது என்பதற்காக பெற்ற குழந்தையை தாய்மார்கள் அநாதை இல்லங்களில் ரகசியமாக போட்டுச் சென்றிருக்கும் செய்திகளையும் வாசித்திருப்பீர்கள்.. "இவையெல்லாம் குதர்க்கமான, விபரீதமான விதிவிலக்குகள்.. புத்தி சரியாக நிதானமாக செயல்படுகிற எவரும் இதையெல்லாம் செய்யத் துணிய மாட்டார்கள்" என்று நீங்கள் வாதிடலாம். தவறில்லை.

ஆனால் சரியான திட்டங்களுடன் மெல்ல மெல்ல ஒருவரால் அல்லது ஒரு குழுவால் உங்களை அந்தச் சூழலுக்குள் இட்டுச் செல்ல முடியும். "ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம்" என்றான் புத்தன். கடுகுக்குள் எரிமலையை அடக்கினது போல மிகப் பெரியதொரு உண்மையை, வாழ்வியலின் தத்துவத்தை ஒற்றைவரியில் அவன் சொல்லிச் சென்றாலும் இதையும் நம்மில் பெரும்பாலானோர் அறிந்திருந்திருந்தாலும் எத்தனை பேர் அந்த வாக்கியத்தில் உண்மையை மனதார உணர்ந்து பின்பற்றுகிறோம்? உண்மையான ஞானிகளைத் தவிர எவருமில்லை. அவர்களும் கமெராவில் மாட்டிக் கொள்ளும் வரை ஞானிகளா என்பதையும் அறிய முடிவதில்லை.

ஆயிரக்கணக்கான ஆசைகள் நம் மனதின் ஆழத்தில் உறைந்திருக்கின்றன. அவைகளில் சில நிறைவேறினாலும் நாம் திருப்தியுறுவதில்லை. அடுத்து அடுத்து... என்று யோசித்துக் கொண்டேயிருக்கிறோம்.

கீழே சிதறிக் கிடக்கும் பத்து ரூபாயை எடுக்கப் போய் மடியில் வைத்திருக்கும் ஆயிரத்தை இழக்கிறோம். கடவுளின் போதனைகளை விட சாத்தான்களின் கட்டளைகளே நமக்கு வசீகரமாக இருக்கின்றன. இந்த எண்ணுக்கு மிஸ்ட் கோல் தந்தால் நமக்கு ரூபா.100 இற்கு ரீசார்ஜ் செய்யப்படும் என்றால் அதன் பின்னுள்ள வலைபற்றி யோசிப்பதில்லை. உடனே செய்யத் தயாராக இருக்கிறோம்.

அரச அதிகாரிகள், நீதிபதிகள், காவல் துறையினர், தொழில் அதிபர்கள், ஆசிரியர்கள்.. என்று சமூகத்தின் மையவட்டத்தில் இருப்பவர்கள் கூட சில சம்பவங்களில் ஏமாற்றப்பட்டிருப்பதைப் பார்த்து நாம் ஆச்சரியப்பட்டிருக்கலாம். "பாமரர்கள் ஏமாறுவது ஒருபக்கம். அறிவாளிகள் என்று நம்பப்படும் இவர்கள் கூட எப்படி ஏமாந்தார்கள்?" என்கிற கேள்வி நமக்குள் எழலாம்.

ஆனால் அவர்கள் ஏதோ ஒரு நாளின் விடியற்காலையில் ஏமாந்தவர்கள் அல்ல. சிலந்தி வலையில் சிக்கிய பூச்சி போல அவர்கள் அறியாமலேயே மெல்ல மெல்ல ஏமாற்றத்தின் வலையில் சிக்கிக் கொண்டவர்கள். ஒரு கனவு போல அது நிகழ்ந்திருக்கும்.

ஏமாந்த பிறகுதான் அவர்கள் செய்த அபத்தம் அவர்களுக்கே உறைக்கும். அவர்கள் நாமாகவும் இருக்கலாம். ஏமாறும் விருப்பம் அவர்களுக்குள்ளேயே இருந்திருக்கும். அவர்களின் பேராசை ஏமாற்றத்தை நோக்கி செலுத்தியிருக்கும்.

இந்த குரூரமான நீதியைத்தான் இத்திரைப்படம் சொல்கிறது.

எலியட்டுக்கு அந்த நாள் மோசமானதாக விடிகிறது. வேலையை இழக்கிறான். புத்தி சுவாதீனமில்லாத சகோதரனை, கர்ப்பிணியாக இருக்கும் காதலியை, வயதான தந்தையை காப்பாற்றும் பொறுப்பு. கடுமையான நிதி நெருக்கடி. மனஉளைச்சல். அந்தச் சமயத்தில் தான் அந்த அநாமதேய ..போன் வருகிறது. அவன் எதிரேயிருக்கும் ஒரு ஈயை கொன்றால் உடனே அவனுக்கு ஆயிரம் டொலர் கிடைக்கும்.

எலியட்டுக்கு ஒன்றும் புரியவில்லை. மிக எளிமையான விஷயம், ஆயிரம் டொலர். சரி ஈயை சாகடித்துதான் பார்ப்போமே என்று அந்த ஆணையை செயல்படுத்துகிறான். உடனே அவன் கணக்கில் ஆயிரம் டொலர் வந்து விழுகிறது.

அடுத்தது சாகடித்த அந்த ஈயை உண்ண வேண்டும் என்ற ஆணை. இன்னொரு ஆயிரம். இப்படியாக 13 ஆணைகளை அவன் நிறைவேற்றினால் கோடீஸ்வரனாகி விடலாம். ஆனால் தொகை ஏற ஏற ஆணைகளும் விதிகளும் அதற்கேற்ப கடுமையாகும். இதை வெளியில் சொல்லவும் கூடாது.

இப்படியொரு அட்டகாசமான சதுரங்க விளையாட்டு திரைக்கதைக்குள் இத்திரைப்படம் சுவாரசியமாக இயங்குகிறது. இந்த ஆணைகளை நம் வாழ்க்கையின் பல செயல்களுக்குள் பொருத்திப் பார்க்கலாம். அலுவலக பிரமோஷனுக்காக, பக்கத்து வீட்டுக்காரனை விட உயர்ந்த வகையான கார் வாங்குவதற்காக, உயர்தரமான கல்லூரிகளில் பிள்ளைகளை படிக்க வைப்பதற்காக... இப்படி எத்தனை மறைமுக ஆணைகள் நம்மை தொடர்ந்து செலுத்திக் கொண்டே இருக்கின்றன. இவையெல்லாம் எதற்காக என்று நிதானமாக நாம் யோசிப்பதேயில்லை, யோசிக்க விரும்புவதும் இல்லை.

இதன் கிளைமாக்சை சற்று புத்திசாலியாக இருந்தால் யூகித்து விடலாம். மிக சுவாரசியமான திரைப்படம்.




# சுவர்த் தத்துவங்கள்...

**(நூலகத்தில்)**
பேசாத வார்த்தைக்கு நீ எஜமான்
பேசிய வார்த்தை உனக்கு எஜமான்
நீ எஜமானாய் இரு.

**(ஒரு புத்தகக் கடையில்)**
கேட்காமல் சொன்ன ஆலோசனைக்கும்
கெஞ்சாமல் செய்த உதவிக்கும்
மதிப்பு கிடையாது.

**(நாட்காட்டியில்)**
எவ்வளவு பொருளோடு வாழ்கிறோம்
என்பதல்ல வாழ்க்கை.
என்ன பொருளோடு வாழ்கிறோம்
என்பதுதான் வாழ்க்கை.

**(ஒரு முன்பள்ளிக் கூடத்தில்)**
பெற்றோர்களே!
குழந்தையின் அறிவு கூர்வாள்
அதை மழுங்கச் செய்யாதீர்கள்
குழந்தையின் ஆற்றல் போர்வாள்
அதைத் துருப்பிடிக்க வைக்காதீர்கள்.

**(ஒரு சிறு கடையில்)**
எட்டிப் பார்க்கும் தொலைவில் வெற்றி இல்லை.
அதை விட்டுக் கொடுக்கும் தூரத்தில்
நானும் இல்லை.

**(ஒரு கிராமத்து இளைஞர் மன்றத்தின் பெயர்)**
பெண்ணைப் பார்த்தால்
மண்ணைப் பார்க்கும் வாலிபர் சங்கம்

**(திருமண அழைப்பிதழின் உறையில் அச்சடித்திருந்த வாசகம்)**
ONE MOMENT
TWO HEARTS
THREE KNOTS

**(மின்சார அலுவலக தகவல் பலகையில்)**
மின்சாரம் நல்ல தொழிலாளி
ஆனால் கெட்ட முதலாளி

**(லொறியின் பின்னால்)**
மப்பில ஓட்டாதே
தப்புல மாட்டாதே

**(ஆட்டோவின் பின்புறத்தில்)**
பிள்ளைவரம் கேட்டு கோயிலுக்குப் போகும்
எந்தப் பெண்ணுக்கும் தெரிவதில்லை,
அம்மா வரம் கேட்டு காத்திருக்கும்
அனாதை இல்லக் குழந்தைகளை.

**(வகுப்பறை கரும்பலகையில்)**
சிந்திப்பதை நிந்திக்காதே
நிந்திப்பதை சிந்திக்காதே

**(மருத்துவமனை ஒன்றில்)**
அன்பு காட்டு - ஆனால் அடிமையாகிவிடாதே
பணிவாக இரு - ஆனால் கோழையாகிவிடாதே
சிக்கனமாக இரு - ஆனால் கஞ்சனாகிவிடாதே
வீரமாக இரு - ஆனால் போக்கிரியாகிவிடாதே
சுறுசுறுப்பாக இரு - ஆனால் பதட்டப்படாதே
தர்மம் செய் - ஆனால் ஆண்டியாகிவிடாதே
பொருளைத் தேடு - ஆனால் பேராசைப்படாதே

**(ரியல் எஸ்டேட் நிறுவனத்தில்)**
நிலமுடன் வாழ வாழ்த்துகிறோம்

**(சுவர் ஒன்றில் கண்ட கிறுக்கல்)**
தூக்கத்தில் வருவது கனவல்ல...
தூங்கவிடாமல் செய்வதே கனவு.




தென் கொரியாவின் சியோல் நகரிலிருந்து, 200 கி.மீ., தூரத்தில் போரியாங் என்ற நகரம் உள்ளது. இங்கு நடக்கும் சேறு திருவிழா மிகவும் பிரபலம்.

போரியாங் பகுதியில் உள்ள களிமண் சாந்தில் ஏராளமான மூலிகைகள் கலந்துள்ளன. இதனால், இந்த சேறை வைத்து, பல அழகு சாதனங்களை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். அந்தப் பொருட்களை உலகம் முழுவதும் பரப்புவதற்கான யுக்தி தான் இந்த சேறு திருவிழா.

மூலிகைகள் நிறைந்துள்ள பகுதியிலிருந்து லொறிகள் மூலம் ஏராளமான சேறுகளை அள்ளி வந்து, ஒரு மைதானத்தில் கொட்டி, விழா எடுக்கின்றனர். இதில், தென் கொரியர்களுடன், ஐரோப்பியர்கள், அமெரிக்க ராணுவத்தினர் மற்றும் கொரியாவில் பணியாற்றும் ஆங்கிலேயர்கள் பங்கேற்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் இந்த திருவிழாவை கண்டுகளிக்க, 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் கூடுகின்றனர் அடர்ந்த சேற்றில் வாகனங்களை ஓட்டும் போட்டி, சேற்றிலேயே சறுக்கு விளையாட்டு என, பல்வேறு போட்டிகள் நடக்கின்றன. இப்போட்டிகளில் பங்கேற்பதுடன், சேற்றில் இறங்கி, ஆட்டமும் போடுகின்றனர்.

தினமும் மாலையில் பாட்டுக் கச்சேரியும், கடைசி நாளன்று வாண வேடிக்கையும் உண்டு. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள், இந்த சேற்றில் புரண்டு அனுபவிப்பதுடன், மூலிகை மண்ணால் செய்யப்பட்ட அழகு சாதனப் பொருட்களையும் வாங்கிச் செல்கின்றனர்.

வியாபார தந்திரம் எப்படியெல்லாம் செய்ய வைக்கிறது பாருங்கள்!

# புதிர்ப்போட்டி இல. 07


**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு பாடங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**

இல .7.1


## கதையோடு கணக்குப்போடு புதிர்க்கணக்கு



காரினால் ஒருவர் முட்டை வியாபாரியினை இடித்துவிட்டார் வியாபாரி பெருந்தன்மையுடன் அவரை மன்னித்து விட்டார். ஆனால் காரின் உரிமையாளர் எனது கவனக்குறைவால் இடித்து உங்கள் முட்டைகள் உடைந்துவிட்டதே என்று வருத்தமாகவும் உள்ளது. எனவே, உரிய பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்.இதனைக் கேட்ட முதியவர், முட்டைகளை நான் எண்ணி எடுத்துவரவில்லை. ஆனால், அவற்றை இரண்டிரண்டாகப் பிரித்தால் ஒரு முட்டை மீதி இருக்கும். மூன்று மூன்றாகப் பிரித்தால் 2 முட்டை மீதி இருக்கும். நான்கு நான்காகப் பிரித்தால் 3 முட்டை மீதி இருக்கும். ஆறு ஆறாகப் பிரித்தால் 5 முட்டையும், ஏழு ஏழாகப் பிரித்தால் சரியாகவும் இருக்கும் என்று கூறினார்.புத்திசாலியும், கணக்கில் புலியுமான காரின் உரிமையாளர், உடனே கணக்குப் போட்டு, முட்டையின் விலையைக்கேட்டு முதியவருக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்தார். முதியவரின் கூடையிலிருந்த மொத்த முட்டைகள் எத்தனை என்று நீங்களும் கண்டுபிடித்து விடுவீர்கள்தானே?

இல .7.3

## புதிர்க்கணக்கு



ஒரு அரண்மனையில் இருந்து நான்கு பேர் தங்க நாணயங்களைத் திருடிச் சென்றனர் . பங்கிட்டுக் கொள்ள முடியாத சூழ்நிலையில் ஒரு இடத்தில் புதைத்து வைத்து விட்டு தனித் தனியாக எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்கின்றனர் .இரவு பொழுது வேறு ..... முதலில் . ஒருத்தன் வந்து இருக்கும் நாணயங்களை நான்காகப் பிரித்து அதில் ஒரு பங்கை எடுத்துச் செல்கின்றான் ..இரண்டாமவனுக்கு முதலில் ஒருவன் வந்து போனது தெரியாது .அதனால் மீதமுள்ள நாணயங்களை நான்காகப் பிரித்துஅதில் ஒரு பங்கையும் எக்ஸ்ட்ரா ஒரு நாணயத்தையும் எடுத்து செல்கின்றான் ..மூன்றாமவனுக்கு இரண்டு பேர் வந்து போனது தெரியாது .அதனால மீதமுள்ளவற்றை நான்காகப் பிரித்து அதில் ஒரு பங்கையும் எக்ஸ்ட்ரா இரண்டு நாணயங்களையும் எடுத்துச் செல்கின்றான் ..

நான்காமவன் வரும் போது விடிந்து விடுகிறது ..அதனால் வந்து போன கால் தடங்களைப் பார்த்து விட்டு மீதமுள்ள நாணயங்கள் தனக்குத் தான் என்று நினைத்து எடுத்துச் செல்கின்றான் ..ஆனால் அந்த நான்கு பேரும் ஒரே எண்ணிக்கையில் நாணயங்களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள்.கேள்வி : இருந்த மொத்த நாணயங்கள் எத்தனை ?? ஒவ்வொருவரும் எத்தனை நாணயங்கள் எடுத்துச் சென்றிருப்பர் ?

இல .7.2

## புதிர்க்கணக்கு

ஒரு குளத்தில் பெரிய தாமரைப் பூக்கள் அழகாக மலர்ந்திருந்தன. அந்தக் குளத்தை நோக்கி சில பறவைகள் வந்தன. குளத்தில் மலர்ந்திருந்த தாமரைப் பூக்கள் பறவைகளை கவர்ந்தன. ஒவ்வொரு தாமரைப் பூவும் பட்டு சிம்மாசனம் போல இருக்கிறது. நாம் கொஞ்சம நேரம் இந்தப் பூக்களில் உட்கார்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டு. பிறகு போகலாம் என்று ஒரு பறவை கூறியது.

அதை மற்ற பறவைகள் ஏற்றுக் கொண்டன. உடனே, ஒவ்வொரு பூவிலும ஒரு பறவை வீதம் உட்கார்ந்தன. அவ்வாறு உட்கார்ந்த போது. ஒரு பறவைக்கு பூ கிடைக்கவில்லை. அதனால், பறவைகள், ஒரு பூவுக்கு இரண்டு பறவைகள் வீதம் உட்காரலாம் என்று முடிவு செய்தன. அதன் படி, ஒவ்வொரு பூவிலும் இரண்டாக உட்கார்ந்தன. அப்படி உட்கார்ந்த போது ஒரு பூ மீதம் இருந்தது. அப்படியானால், குளத்தில் இருந்த பூக்கள் எத்தனை? அதில், உட்கார வந்த பறவைகள் எத்தனை? என்று கண்டுபிடிங்க பார்க்கலாம்!

இல .7.4

## மொத்த நெல்லிக்கனிகள் புதிர்



உடல் நலம் சரியில்லாத தன் குழந்தையை மருத்துவரிடம் காட்டினார் தமிழரசன். குழந்தையின் உடல்நலனைப் பரிசோதித்த மருத்துவர், மூலிகைத் தன்மை நிரம்பப் பொருந்திய நெல்லிக்கனி தினமும் ஒன்று கொடுத்து வந்தால் குழந்தையின் உடல் நலம் சரியாகும் என்றார். இந்த அபூர்வ நெல்லிக்கனி எங்கே கிடைக்கும் என மருத்துவரிடம் கேட்டார் தமிழரசன். அரசனின் தோட்டத்தில் உள்ளன என்றார் மருத்துவர்.

தோட்டத்தினுள் நுழைய 6 வாயில்களைக் கடக்க வேண்டுமே என்று யோசித்துக் கொண்டே அரசனின் தோட்டத்திற்குச் சென்றார் தமிழரசன். ஒவ்வொரு வாயிலிலும் ஒரு வீரர் காவல் இருப்பர். அவர்கள் அனுமதி தர வேண்டுமே என நினைத்து, முதல் வாயிலில் நின்ற வீரனிடம் விவரம் சொல்லி அ-னுமதி கேட்டார். அதற்கு அவ்வீரன், தாங்கள் கொண்டுவரும் நெல்லிக்கனிகளில் பாதியை எனக்குத் தர வேண்டும். இந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டால் உள்ளே செல்ல அனுமதிக்கிறேன் என்றார்.

ஒவ்வொரு வாயிலில் நின்ற வீரர்களும் இதே நிபந்தனைகளுடன் உள்ளே செல்ல அனுமதியளித்தனர். உள்ளே சென்ற தமிழரசன் ஒவ்வொரு வாயிலிலிருந்தும் வெளியில் வரும்போது தன்னிடமிருந்த நெல்லிக்கனிகளில் பாதியை வாயிற்காவலர்களிடம் கொடுத்துவிட்டு வந்தார். 6 வாயிற்காவலர்களுக்கும் கொடுத்து வெளியே வந்த போது அவரிடம் ஒரே ஒரு நெல்லிக்கனி மட்டும் மீதி இருந்தது.

தமிழரசன் பறித்த நெல்லிக்கனிகள் எத்தனை?

இல .7.5

## நான் யார்?

1) என்னை சத்தமாக அழைக்கும்போது காணாமல் போயிருப்பேன் நான் யார்?
2) நான் நானாக இருப்பேன் நான் யாரென்று தெரிந்த பிறகு நானாக இருக்க மாட்டேன் நான் யார்?
3) பசிக்கு தீனி தந்தால் குஷிதான். தாகத்துக்கு நீர் தந்தால் ஓடிவிடுவேன் நான் யார்?
4) நான் இருந்ததில்லை ஆனாலும் இருப்பவனாக இருப்பேன். நான் யார்?
என்னை யாரும் பார்த்ததில்லை பார்க்கும் முன் பழசாயிருப்பேன் என்னை நம்பியே இந்த உலகமும் மக்களும் நல்லது நடக்குமென எ்ண்ணுகின்றனர் நான் யார்?
5) உனக்கு முன்னாலும் போவேன் பின்னாலும் தொடர்ந்து வருவேன். ஆனால் ஒருபோதும் மேலே போக மாட்டேன்.
6) என் உடல் முழுவதும் காற்று ஆனாலும் நான் சுவாசிக்க மாட்டேன் நான் யார்?
7) என்னைத் தெரியாத போது தெரிந்து கொள்ளும் ஆவல். தெரிந்த பிறகு பகிர்ந்து கொள்ளும் ஆசை. நான் மறைக்கப்பட வேண்டியவன். நான் யார்?
8) நொடியில் ஒருமுறை வருவேன். வாரத்தில் இரண்டு முறைவருவேன் மாதத்தில் வராமலே இருப்பேன் நான் யார்?
9) மேலே மட்டுமே போவேன் கீழே வரமாட்டேன் நான் யார்?
10) ஏழைகளிடம் இருப்பவன்பணக்காரர்களுக்குத் தேவைப்படுபவன் நான் யார்?

## சென்றவார புதிர்களுக்கான விடைகள்

**இல 6.1** புவனா வாங்கிய 10ரூபாய் சாக்லேட்கள் எத்தனை?
3 ரூபாய் சாக்லேட்கள் எத்தனை?
50 சதம் சாக்லேட்கள் எத்தனை?
10 /= 5
3 /= 1
50 சதம் - 94

**இல .6.2**
1. அதுதான் கரையுமே
2.நம்முடைய நிழல்
3.மழை
4. நம் கண்களை
5.ஆலமரம்
6.எறும்பு
7.மின்விசிறி
8.தண்ணீர்

**இல .6.3** அவர் பதில் - மார்ச் 21. 1999
மேலுள்ள மாதங்களுக்கான வரிசையில் அதற்கான எண் - 3
அடுத்துத் திகதியை எடுக்கவும் - 21
வருடத்தின் கடைசி இரண்டு இலக்கத்தை மட்டும் எடுக்கவும் - 99
வருடக் கடைசி இலக்கத்தை 4 ஆல் வகுக்கவும் - 99/4 = 24 மீதி 3
அடுத்து அனைத்து எண்களையும் சேர்க்கவும் - 3 + 21 + 99 + 24 = 147
தற்போது கூட்டி வந்த எண்ணை 7 ஆல் வகுக்கவும் - 147/7 = 21 ஆல் வகுத்த பின்பு மீதி = 0
மீதியாக வரும் எண்
0 - ஞாயிற்றுக் கிழமை
1 - திங்கள் கிழமை
2 - செவ்வாய்க் கிழமை
3 - புதன் கிழமை
4 - வியாழக் கிழமை
5 - வெள்ளிக் கிழமை
6 - சனிக் கிழமை.
இங்கு நாம் கணக்கிட்ட நாளுக்கான கிழமை 0 என்பதால் ஞாயிற்றுக்கிழமை.

**இல .6.5** தமிழ் எண் வடிவத்தில் எட்டாவது எண் வடிவம் அ, ஐந்தாவது எண் வடிவம் ரு, இவையுடன் கடைசியாக மை சேர்த்து விடை காணப்பட்டுள்ளது.

**இல.6.6** அதாவது திரு, வாவி, வானதி, வான், குடி என இணைத்து பின் திருவாவினன்குடி என்று விடை காண் வேண்டும்.

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/ வல்வை மகளிர் கல்லூரி.


பெயர் :- த.தட்சியா
தரம் :- 8
பாடசாலை:- யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**விண்ணப்பதாரரின் விபரம்**

முழுப்பெயர் :- ------------------------------------
பாடசாலை :- ------------------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------------
வீட்டு முகவரி :- ------------------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------------

# இளைஞர் கழகத்தால் திரட்டப்பட்ட நிதி

# கல்வி அபிவிருத்திக்கு ஒதுக்கீடு



(முல்லைத்தீவு)

முறிகண்டி புகையிரத நிலையம் அமைப்பதற்காக இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தினால் இளைஞர் நிதிவாரத்தினுடாக சேகரிக்கப்பட்ட நிதியினை முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்கு பயனபடுத்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது என முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி மா.சசிகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேலே அவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இன,மத,மொழி,பால்,வர்க்க வேறுபாடின்றி இளைஞர்களுக்காக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

யுத்தம் நிறைவு பெற்ற பின்னரே முல்லைத்தீவு மாவட்டத்தில் இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கையினை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் முழுமையாக முன்னெடுத்தது.

யத்தம் காரணமாக கூடுதலான இளைஞர் யுவதிகள் க.பொ(சா/த)சித்தி பெற்ற போதும் உயர்தரத்துக்கு தோற்றாமலும் அதே போன்று சாதாரண தரத்தில் கணித பாடம் சித்தியடையாமலும் உள்ளனர்.அவ்வாறே இன்று கணித பாடத்தில் சித்தி பெறும் வீதம் குறைவாகக் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இளைஞர் தலைவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க இளைஞர் விவகார அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்ட போது இதனை அவதானிக்க முடிந்தது.

இதனால் முல்லைத்தீவு மற் றும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் தலைவர் மாணவர்களின் கல்வித் தகைமையைக் கூட்ட இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தினால் இளைஞர் நிதி- வாரத்தினுடாக முறிகண்டி புகையிரத நிலையம் அமைப்பதற்காக சேகரிக்கப்பட்ட 35 இலட்சம் ரூபாவினை பயன்படத்த அனுமதி வழங்கியிருந்தார்.

அதற்கமைய இரு மாவட்டங்களிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கணித பாடம் சித்தி பெறாத இளைஞர் யுவதிகளுக்கு விசேட வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த வாரம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு இந் நிதியில் இருந்து தலா 10 இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந் நிதியூடாக இவ் வருடம் சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களுக்கு பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் முல்லைத்தீவு மாவட்டத்தின் இரண்டு கல்வி வலயத் திலும் மூன்று விசேட மீட்டல் வகுப்புக்களை நடாத்தவுள்ளோம்.இதன் முதலாவது வகுப்பு நாளை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதே வேளை யத்தத்தினால் பாதிக்கப்பட்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற முடியாத பாதிக்கப்பட்ட எமது இளைஞர்களுக்கு அடுத்தவருடம் தை மாதம் முதல் உயர்தர கலைப்பாட வகுப்பினை நடாத்தி பரீட்சைக்கு தோற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.இதற்காக முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களுக்கு 15 இலட்சம் ரூபா புகையிரத நிலைய புனரமைப்பிற்காக சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (40)

## நவராத்திரி விழா

சாவகச்சேரி விளைவேலி தாளையம்பதி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நவராத்திரி விழா எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை 4.30 மணிக்கு விசேட அலங்கார பூசை நடைபெறுவதுடன் 9ஆவது நாளான எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை விஜயதசமி அன்று மு.ப 10மணிக்கு கும்பச்சரிவும் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும், பூசையும் இடம் பெற்று. வித்தியாரம்பமும் இடம பெறும். மாலை 2.30மணிக்கு மகுடாசூரன் சம்ஹாரம் இடம்பெறும். (இ)

# கழிவுபொருட்களால் சுகாதாரத்திற்கு பங்கம்

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட வேம்பிராய் இந்து மயானப் பகுதியில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வேம்பிராய் சந்தியில் இருநத 150மீற்றர் தூரத்தில் உள்ள இந்து மயானத்திற்கு அருகில் பொலித்தீன்பைகள், போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், தகரப்பேணிகள் முதலான பொருட்களை வேறு இடங்களில் இருந்து பலர் கொண்டு வந்து வீசுவதாகவும் இதனால் அப்பகுதி குப்பை மேடுபோலகாட்சி தருவதாகவும் அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இவ் இடங்களில் குப்பைகள் போடக்கூடாது என பிரதேசசபை எழுத்தில் பெயர்ப்பலகை பொறிக்க வேண்டுமெனவும், அதனையும் மீறி கொட்டுபவர்களை சட்டத்தின்முன்நிறுத்த .நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (14)




போசாக்குத் திட்டத்தின் கீழ் முன்பள்ளி மாணவர்களுக்கு அண்மையில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் செயலாளர் லயன் வைத்திய கலாநிதி இ.கந்தையாவினால் இலைக்கஞ்சி வழங்கப்பட்டபோது.




## தமிழரசுக்கட்சியின் தீர்வு முயற்சிக்குள் முஸ்லிம்களா?.... முஸ்லிம் காங்கிரசின் தீர்வு முயற்சிக்குள் தமிழர்களா?...



'இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான அரசியல்தீர்வு முயற்சிக்குள் முஸ்லிம்களும் உள்ளடக்கப்படுவர்' - தமிழரசுக்கட்சியின் மற்றுமோர் செயலில்லாப்புயல்.

'தமிழர் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்காகத்தான் கூட்டமைப்பு நரேந்திர மோடியினைச் சந்தித்தாகவும், அந்தத் தீர்வு முயற்சிக்குள் முஸ்லிம்களும் உள்ளடங்குவர்' எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

அதேவேளை முஸ்லிம்களின் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான திர்வு யோசனை ஒன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊவா மாகாண சபைத் தேர்தலின் பின்னர் வெளியிட உள்ளது என்றும் அது 'வடக்கு - கிழக்கு தமிழ்மொழி பேசும் மக்களின் தாயகம்' என்கின்ற கோட்பாட்டைக் கொண்டமைந்திருக்குமெனவும் முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடம் அறிவித்துள்ளது.

இதில் யாரின் தீர்வு யாருக்கு அமுல்படுத்தப்படும்?.... யாரிடம் இவர்கள் தீர்வைப் பெறப்போகின்றார்கள்?.... இதற்காக யாரிடம் இவர்கள் போகின்றார்கள்?..... **சிந்திக்க வேண்டிய பல சிக்கலுக்குள் இலங்கைச் சிறுபான்மை இருக்கின்றது என்பது மட்டும் தெளிவாகப் புரிகின்றது.**

முஸ்லம் காங்கிரஸ் ஊவா மாகாண தேர்தல் வெற்றிக்காக அவிட்டு விடும் அலங்காரங்கள் என்பதற்கப்பால் சிந்தித்தாலும் இவர்களின் 'வடக்கு - கிழக்கு தமிழ் மொழிபேசும் மக்களின் தாயகம்' என்கின்ற கோட்பாட்டை மற்றைய முஸ்லிம் கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமா?.... இது தொடர்பாக சிந்திக்காது தமிழரசுக்கட்சியின் இணக்கப்பாட்டை தேட முற்படுவது எந்த வகையில் ஏற்புடையது. இதன் மூலம் இது தேர்தல் பிரசார வெறும்பேச்சு என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

மறுபுறத்தில் கிடைத்த வடக்கு மாகாண சபையினைக் கூடத் திறம்பட இயக்க முடியாது உள்ளுக்குள் முரண்பட்டுக்கொண்டிருக்கும் கூட்டமைப்பு பிறிதொரு அரசியல் தீர்வினை முன்வைக்கப் போகின்றார்களாம்... அதில் முஸ்லிம்களையும் உள்ளடக்கப் போகின்றார்களாம்...

மக்களை ஏமாற்றி தமது அரசியல் நிலைப்பினைத் தக்கவைக்க பல துருவங்களில் சிந்திக்கும் இக்கட்சிகள், சிந்தனையின் சிறு துருவத்திலேனும் யதார்த்த பூர்வமாக சிறுபான்மையினங்களின் எதிர்காலம் தொடர்பாக சிந்திக்கலாமல்லவா?...

தேர்தலுக்கு இங்கு வந்தார் மனோகணேசன். பின்பு அங்கு சென்றார் விக்னேஸ்வரன். ஆக்ரோசமாக கூட்டுச்சேர்ந்து ஆயிரம் வார்த்தைகள் பேசினார்கள். பின்பு இவரையும் அங்கு காணவில்லை அவரையும் இங்கு காணவில்லை.

அன்று ஆக்ரோசமாய் இங்கு வந்து அரசை எதிர்த்த மனோகணேசன் அதே அரசின் தூதோடு பின்பு வந்தார். இவையெல்லாம் தேர்தல் வெற்றிக்கான பரிமாற்றங்களே தவிர தீர்வு முயற்சிக்கான காத்திரமான வடிவங்கள் அல்ல.

அன்று அரசோடு சேர்ந்து ஐ.நா வின் விசாரணையை எதிர்த்து, 'இதற்கு ஆதரவு வழங்குவது நாட்டையே காட்டிக் கொடுக்கும் செயற்பாடு; இது தொடர்பாக தமிழத்தேசியக் கூட்டமைப்பு சிந்தித்து செயற்படவேண்டும்; இலங்கையில் சிறுபான்மையினங்கள் அரச ஆதரவை இழந்து சர்வதேச சஞ்சலங்களை நம்பி வாழமுடியாது' என அறிக்கை விட்ட முஸ்லிம் காங்கிரஸ், அளுத்கம கலவரத்தைத் தொடர்ந்து சிங்கள எதிர்ப்புக்கோசம் எழுப்பினால்தான் ஊவா மாகாணசபைத் தேர்தலில் வெல்லமுடியும் என்பதற்காக கூட்டமைப்பின் குமுறல்களிற்குள் சேர்ந்து நிற்கின்றது. தேர்தல் முடிந்த பின்பு எது சரியான வழியென்பதை முஸ்லிம் காங்கிரஸ் தெரிந்து செயற்படும். ஆனால் கூட்டமைப்போ!.....


முரண்பாடுகளும் முக்கியமற்ற வியாக்கியானங்களும் தான் தமிழத் தேசியக் கூட்டமைப்புக்குள் தலைவிரித்தாடுகின்றது. தலைமைப் பதவிக்கு வந்த வுடனேயே 'தன்னை யாரும் மிஞ்சக்கூடாது; தன்து அறிவின்மையை யாரும் சாதகமாகப் பயன்படுத்தக்கூடாது என்கின்ற யாழ்ப்பாண ஈகோ(ego) மாவையரிற்கு உருப்பெறத் தொடங்கிவிட்டது.


'சர்வதேச விடயங்கள் தொடர்பாக தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்த்துக்கொள்வார்கள் மாகாணசபை உறுப்பினர்கள் இதில் தலையிடத் தேவையில்லை' என்று விட்டார்.

இந்த விடயத்தை சற்று சிந்தித்துப்பாருங்கள். தலைமைக்கு இவர் பொருத்தமானவரா? என்பது புலப்படும். குழப்பத்தை உண்டு பண்ணத்தான் குறித்த அந்த மாகாணசபை உறுப்பினர் இவ்வாறான கருத்துக்களை முன்வைத்தாலும்... அவர் கூட்டமைப்பின் பிறிதோர் கட்சி உறுப்பினர் அத்துடன் ஏற்கனவே முரண்பாடு முற்றிய நிலையில் கூட்டமைப்பில் பல பிளவுகள் உள்ளன. பதவிக்கு வந்தவுடனேயே இவ்வாறான கருத்துக்களை பத்திரிகை அறிக்கையாக வெளியிடுவது எந்த வகையில் ஏற்புடையது.

இவ்வாறான தலைமைகளால் எதிர்காலத்தில் மேலும் பல முரண்பாடுகள்தான் கூட்டமைப்பிற்குள் மிஞ்சப்போகினறன. இவ்வாறிருக்கும் போது **தீர்வு பற்றி சிந்திப்பது சிறுபான்மை இனங்களிற்கு சிம்மாசனச் சொப்பனங்கள்தான்.** ¢

# நன்றி பாராட்டி வாழ்த்திய கரங்கள்





சில்போதயம் 2014 தேசிய கைவினை கண்காட்சி மற்றும் விற்பனை சந்தையின் வெற்றியை கொண்டாடும் முகமாக தேசிய அருங்கலைகள் பேரவையினால ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த விருந்துபசாரத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துள்ளார்.

கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய அருங்கலைகள் பேரவையில் கைவினை கிராம வளாகத்தில் மேற்படி நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தேசிய அருங்கலைகள் பேரவையின தலைவர் புத்திகீர்த்திசேன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிகழ்த்தினார்.

இவ்வாண்டு ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான நான்கு நாட்கள் சில்போதயம் 2014 தேசிய கைவினை கண்காட்சி மற்றும் விற்பனை சந்தை கொழும்பிலுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி கூடத்தில் நடைபெற்றிருந்தது.

சில்போதயம் 2014 தேசிய கைவினை கண்காட்சியும் விற்பனை சந்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய விருந்துபசார நிகழ்வில் அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம் உள்ளிட்ட தேசிய அருங்கலைகள் பேரவையின் துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் ஜஸ்ரின் மோகனுக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விருந்துபசாரம் வழங்கி கௌரவித்தார்.

கொழும்பு சினமன் விடுதியில் மேற்படி விருந்துபசார நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது இந்திய அரசின் நிதியுதவியுடன் இந்தியத் தூதரகத்தின் அனுசரணையுடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறுபட்ட மேம்பாட்டு திட்டங்களுக்கு முதன்மைச் செயலாளர் ஜஸ்ரின் மோகன் வழங்கியிருந்த பணிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார். இலங்கையில் கடந்த சில ஆண்டு களாக முதன்மைச் செயலாளராக பணியாற்றிய ஜஸ்ரின் மோகனுக்கு அமைச்சர் விருந்துபசார விருந்தை விசேடமாக ஏற்பாடு செய்து கௌரவம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞான சோதி, அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க, தேசிய அருங்கலைகள் பேரவைத் தலைவர் புத்திகீர்த்திசேன அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜ சிங்கம், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

# கிளிநொச்சியில் 65 வீதமானோருக்கு வீட்டுத் தேவைகள் பூர்த்தி

## அரச அதிபர் மகிழ்ச்சி



கிளிநொச்சி மாவட்டத்தில் 65 வீதமான மக்களுக்கான வீட்டுத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

யூ.என்.கபிரேட் நிறுவனத்தால் வடக்கு, கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வீடுகள் அமைக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு, கிளிநொச்சி நண்பர்கள் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மாவட்ட செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி மீள்குடியேற அனுமதியளிக்கப்பட்டது. மீள்குடியேறிய மக்களுக்கு முக்கிய பல தேவைகள் இருந்தன.

அவர்களின் பாதுகாப்பு, வீடுகளின் தேவை முதன்மை பெற்றிருந்தது. புள்ளி விபரத் தகவல்களின் அடிப்படையில் 33 ஆயிரத் [illegible] குடும்பங்களுக்கு (பகுதி [illegible]திருத்தவேண்டிய வீடுகள் உள்ளடங்கலாக) வீடுகள் தேவையாகவிருந்தன.

இவற்றில் 14 ஆயிரத்து 171 புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன், 2 ஆயிரத்து 465 வீடுகள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நெப் திட்டம், ஐரோப்பிய ஒன்றியம், சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம், தேசிய வீடமைப்பு அதிகார சபை, மீள்குடியேற்ற அமைச்சு, இந்திய மாதிரி வீட்டுத்திட்டம், நோர்வே அரசாங்கம், சர்வோதயம், இலங்கை செஞ்சிலுவை சங்கம், இந்திய வீட்டுத்திட்டம் ஆகியவற்றின் உதவியுடனே மேற்படி வீடுகள் அமைத்தல் மற்றும் அமைக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# அடுத்த வருடம் டிசம்பருக்குள் 32 ஆயிரம் வீடுகள்

ஒப்பந்தங்கள் மூலம் யூ.என்.கபிரேட் நிறுவனத்தால் வடக்கு கிழக்கில் 32 ஆயிரம் வீடுகள் அடுத்தவருடம் டிசம்பர் மாதத்திற்குள் அமைத்து கொடுக்கப்படும் என யூ.என். கபிரேட் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யூ.என்.கபிரேட் நிறுவனத்தால், அவுஸ்திரேலிய அரசாங்கம், ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் இந்திய வீட்டுத்திட்ட வீடுகள் இவ்வாறு அமைத்துக்கொடுக்கப்படுகின்றன. அந்தவகையில் தற்போது 18 ஆயிரம் வீடுகள் இதுவரையில் அமைக்கப்பட்டுள்ளதுடன், 10 ஆயிரம் வீடுகள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்கள்.

அத்துடன், மேலும் 4 ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# இதய சத்திரசிகிச்சைக்கு நிதி திரட்டும் நாட்டியம்



சிங்கப்பூர் ஸ்ருதிலயம் நடன பள்ளி ஆசிரியர் காயத்ரி ஸ்ரீராமினால் நித்ய நிருத்திய நாட்டிய நிகழ்வு கடந்த புதன் கிழமை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

வடக்கில் இயங்கும் இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் பிரிவான ஒக்ஸ்ஸோனின் ஹார்ட் பவுண்டேசனுக்கு நிதி சேர்க்கும் முகமாகவே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# மன்னார் பள்ளிமுனையில் கடல்நீர் தடுப்பு சுவர்

(மன்னார்)

அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் வாழ்வக ஸ்தாபனத்தின் பங்களிப்புடன் மன்னார் பள்ளிமுனை மேற்கு கிராமத்தில் அமைக்கப்படவுள்ள கடல் நீர் உள்வருவதை தடுக்கும் தடுப்புச்சுவர் அமைக்கும் வேலைத்திட்டம் கடந்த புதன் கிழமை மாலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் நகரசபையின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வேலைத் திட்டத்திற்கு அவுஸ்திரேலியா அரசாங்கம் 9 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் திடீர் அனர்த்தத்தை தாக்கு பிடிக்கும் வகையில் குறித்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பள்ளிமுனை மேற்கு கிராம பகுதியில் குறித்த தடுப்புச் சுவர் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளதாக மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் மழை காலங்களில் கடல் நீர் தொடர்ச்சியாக கிராமங்களுக்குள் செல்லுவதினால் கிராம மக்கள் தொடர்ச்சியாக இடப் பெயர்வுகளை சந்தித்து வருகின்றனர்.இந்த நிலையிலே குறித்த பகுதியில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

ஆரம்ப நிகழ்வில் பள்ளிமுனை மேற்கு கிராமத்தில் அமைக்கப்படவுள்ள கடல் நீர் உள்வருவதை தடுக்கும் தடுப்புச் சுவர் அமைக்கும் வேலைத்திட்டத்தின் பெயர் பலகையினை வைபவ ரீதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய திறந்து வைத்ததோடு அடிக்கல்லினையும் நாட்டி குறித்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய,மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரரகாசம்,உபதலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ்,உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.துரம், ஐக்கிய நாடுகள் வாழ்வக ஸ்தாபனத்தின் நிகழ்ச்சித்திட்ட அலுவலகர் எல்.ஜே.பிரசன் னா, மன்னார் நகரசபையின் செயலாளர் லேனாட் லெம்பேட்,மற்றும் மன்னார் நகர சபை உறுப்பினர்களான இ.குமரேஸ்,மெரினஸ் பெரேரா,என்.நகுசீன் உட்பட பள்ளிமுனை மேற்கு கிராம மக்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## English Language

**TEST 1**

**Underline the correct word given in brackets to make the following paragraph meaningful**

Knitting lece is a (1) (fascinate / fascinating / fascinated) Process. Most people in the (2) (South / Southern) part of Sri Lanka (3) (good / better / well) at making different types of laces using cotton thread. Many families in the South do this as a way of (4) (Life / live / living) Knitting lace is (5) (complete / completed / cpmpletely) done by hand.

**TEST 2**

**Match the utterances under (A) with suitable functions under (B) . Write the relevant number in the box.**

**(A) Utterances**

1) Man will be hunting for another planet to survive.
2) We are going on a picnic next Sunday.
3) The train leaves the station at half past nine.
4) I'll definitely come to your birthday party.
5) Let me carry the bags for you.

**(B) Functions**

a) Predicting something ☐
b) Informing a scheduled event ☐
c) Offering help ☐
d) Promising ☐
e) Talking about a future arrangement ☐

**TEST 3**

**Write five sentences about the picture**



1) ..........................................................
2) ..........................................................
3) ..........................................................
4) ..........................................................
5) ..........................................................

**TEST 4**

**Read the following dialogue and answer the questions that follow.**

Maurice : My sister is coming to London for a week

Monika : Oh, that will be nice.

Maurice : Yes, but unfortunately, I can't put up with her and hotels are so expensive.

Monika : Perhaps she can stay with us. We've got a spare room in our flat.

Maurice : Oh, that's fine. Thanks Monika.

Monika : Who else will come with Stella?

Maurice : Her hubby, sometimes.

1) Who is Stella? ..........................................................
2) Where does Monika live? ..........................................................
3) How long will Mourice's sister stay in London? ..........................................................
4) Will Stella put up with her brother? ..........................................................
5) Is Stella married? ..........................................................

**TEST 5**

**Complete the following dialogue using the options given in the box.**

Mother : What shall I make you when you come for tea (1) .......................... What about chocolate cake?

Saman : Oh, yes mum. (2) ..........................................................

Mother : How many friends will join you ?

Saman : (3) ..........................................................

Mother : I'll make (4) ..........................................................

Saman : Thanks, mum. (5) .......................... your ginger flovoured ted.

**Don't forger / It's my favourite too / some pastries as well / with your friends / well..... seven or eight**

**TEST 6**

**Write Paragraph on one of the following. Use about 50 words**

(a) A visit to the zoo (b) My favourite book

..........................................................
..........................................................
..........................................................

**TEST 7**

**Number the following sentences in the right order to form a text which describes an incident.**

**A Penguin Joke**

☐ The next morning, the policeman was walking down the same street when he saw the couple again with the penguin.

☐ One day, a man and his wife were walking down the street when they came across a penguin

☐ 'Mmm,' said the policeman. 'I think the best thing is to take it to the zoo'.

☐ 'Oh!' exclaimed the man..'What a surprise! What shall we do with it?

☐ 'Well, we did, said the man. We took it to the zoo and we all had a really good time'

☐ 'What a good idea!' said the woman. 'We' II go there straight away'.

☐ 'I know', said his wife. 'We' II ask a policeman'.

☐ So this afternoon we're taking it to the Cinema, and this evening we're going to have a meal in a fish restaurant.

☐ So, they found a policeman and explained what had happened.

☐ 'I thought, I told you to take that penguin to the zoo', the policeman said.

**TEST 8**

**You received the following note from your friend. Write a reply giving only the relevant information use about 50 words.**

Hai Premila,

Our friends have planned to go to the Planetarium next Saturday. Are you coming with us? Why didn't you come to school last week? Is your mother ok now? Hope you'd join us. Please let me know.

with love
Asha.

..........................................................
..........................................................

**TEST 9**

**The following extract contains 10 mistakes which are underlined. Write each correct word in the box provided. First one is done for you.**

Once upon a time, a long time ago, (1) their (there) was a knight, who as he (2) grow [ ] older lost all his (3) hairs [ ] He (4) become [ ] a s bald as (5) a [ ] agg. He (6) don't [ ] want any one to see his bald head. So he (7) buy. [ ] a beautiful, black (8) curl [ ] wig.

**TEST 10**

**Complete the following dialogue using the options given below.**

Mary: Our course will be over in two weeks.
When shall we have (1) ............................................................?

Roy : How about, Thursday the 27th?

Mary : (2) ............................................................ for some of us.

Roy : That's true, we'll have it on (3). ............................................................

Mary : That's fine. That day (4) ............................................................

Roy : Yes, but we should ask Sara first. We can't have the party (5) ..............

a) without her

b) No, that's too late.

c) Wednesday the 26th

d) would suit every body.

e) the farewell party.

**TEST 11**

**The following are five students expressing how they help their parents during school vacations. Write their expressions in reported speech. The first one is done for you.**



Priya: I help my mother in cooking.

1) Priya says that she helps her mother in cooking

2) ..............................

3) ..............................



Shanthi: I keep the house clean.



Gamini: I help my father in his garage.

4) ......................



Nelum: I wash all my clothes my self.

5) ......................



Fathima: I make tea for all, in the morning.

6) ......................



Kumar: I do shopping for my family.

**TEST 12**

**Following is a fax massage received by a leading restaurant. Some phrases are deleted. Find them in the box and wirte them in the spaces.**

To : Ever Rest, From : Laura Jonathen.

Message :

I' d like to reserve (1) .............................. We are arriving there (2) .............................. We hope to spend (3) .............................. My daughters and I would preferably like a (4) .............................. Is it possible to have (5) ..............................? I would grateful to you could tell me the price of each room.

Laura.

rooms with a sea view / rooms at you hotel / ten days in your hotel / on 17th August / double bedroom with a balcony.

**TEST 13**

**Fill in the blanks using the words given in brakets to make a meaningful paragraph. First one is done for you.**

Dolphins do have fairly (1) larger brains. There are many stories, ancient and (2) .............................. about dolphins saving sailors from (3) .............................. Ever since the film (4) .............................. we have all seen how clever they are at learning how to do (5) .............................. However the truth is that dolphins are no more intelligent than (6) .............................. which can also be (7) .............................. to do tricks. The story about rescuing (8) .............................. are true, but they automatically rescue anything which is about the same size as themselves.

Flipper / drowning / rats/ tricks/ trained / people/ modern

**TEST 14**

**You have joined a new school after your O/L examination. Write a letter to your best friend giving details about your new school. Use not more than 150 words.**

Include the following:- name of the school
- discription of the school
- your new friends
- details about subjects and teachers.

**கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வெளியான தரம் -4 புலமைப்பரிசில் முன்னோடி பரீட்சை வினாக்களின் விடைகள்**

**14 செப்ரெம்பர் 2014 ஞாயிற்றுக்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1) 1 | 9) 3 | 17) 3 | 25) திங்கள் |
| 2) 2 | 10) 1 | 18) 3 | 26) 5.5 |
| 3) 2 | 11) 1 | 19) 3 | 27) 323 |
| 4) 3 | 12) 3 | 20) 2 | 28) 0.2, 0.6, 0.8, 1.1 |
| 5) 3 | 13) 4 | 21) மேசை | 29) 20 |
| 6) 2 | 14) 3 | 22) பட்டம் | 30) குரங்கு |
| 7) 3 | 15) 2 | 23) திகதி | 31) பணம் |
| 8) 2 | 16) 1 | 24) மேகம் | |

**16 செப்ரெம்பர் 2014 செவ்வாய்க்கிழமை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 2 | 9) 3 | 17) 2 | 25) 1 | 32) 4 |
| 2) 2 | 10) 2 | 18) 1 | 26) 3 | 35) 2 |
| 3) 2 | 11) 3 | 19) 2 | 27) 2 | |
| 4) 3 | 12) 1 | 20) 3 | 28) 1 | |
| 5) 3 | 13) 2 | 21) 1 | 29) 2 | |
| 6) 3 | 14) 3 | 22) 3 | 30) 1 | |
| 7) 3 | 15) 3 | 23) 3 | 31) 3 | |
| 8) 3 | 16) 1 | 24) 2 | | |

**19 செப்ரெம்பர் 2014 வெள்ளிக்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 9) 1 | 15) 3 | 21) 1 |
| 2) 3 | 10) 1 | 16) 2 | 22) 1 |
| 3) 3 | 11) 3 | 17) 3 | 23) 3 |
| 4) 1 | 12) 1 | 18) 3 | 24) 3 |
| 5) 3 | 13) 2 | 19) 2 | 25) 1 |
| 6) 2 | 14) 2 | 20) 3 | |
| 7) 2 | | | |
| 8) 2 | | | |

# மோசடி செய்து பணம் பெற்ற நபர் வவுனியா பொலிஸாரால் கைது

வயது முதிர்ந்த குடும்பம் ஒன்றை ஏமாற்றி அவர்களின் வங்கிக் கணக்கில் இருந்து மோசடியான முறையில் பணம் பெற்ற சந்தேகத்தில் ஒருவரை பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளனர்

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது

வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் வயது முதிர்ந்த குடும்பத்தினர் வசித்து வந்துள்ளனர். இவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் உள்ளனர். இந்த நிலையில் வயது முதிர்ந்த தாய், தந்தை ஆகிய இருவரையும் வழமையாக ஆட்டோவில் ஏற்றிச் செல்லும் ஒருவர் அவர்களுடன் நெருக்கமாகப் பழகியுள்ளார். வங்கி நடவடிக்கைக்காக முதியவர்களுடன் வங்கிக்குச் சென்ற ஓட்டோச் சாரதி, வங்கி பணவிபர நிலுவைகளை அறிந்து வேறு நபருடன் இணைந்து குறித்த முதியவர்களின் கணக்குக்கான வங்கி அட்டையைப் பெற்று அதிலிருந்து 150,000 பணத்தை மோசடியானமுறையில் பெற்றுள்ளார்.

இதேவேளை இவர்களது வங்கிக் கணக்கு புத்தகமும் காணாமற் போயுள்ளது. இந்த நிலையில் வயது முதிர்ந்த தந்தை கடந்த யூலை மாதம் இறந்துவிட்டார். இதன்பின்னர் மூதாட்டி வங்கிக்கு சென்று தனது புத்தகம் தொலைந்து விட்டதாகவும் அதனைப் புதிதாக தருமாறும் கோரியுள்ளார்.

அதனடிப்படையில் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி வங்கியால் புதிய புத்தகம் வழங்கப்பட்ட போதே 150,000 ரூபா பணம் வங்கி அட்டை மூலம் பெறப்பட்டது தெரியவந்தது. இதனையடுத்து, தான் வங்கி அட்டை எதற்கும் விண்ணப்பிக்கவும் இல்லை. அதிலிருந்து பணம் பெறவும் இல்லை எனவும் தனது பணத்தை வங்கியில் இருந்து யாரோ எடுத்து விட்டார்கள் எனவும் வவுனியா பொலிஸில் அந்த மூதாட்டி முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா பொலிஸார் இச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒரு இளைஞரை கைது செய்தனர் என்றும், ஆட்டோ சாரதியை தேடிவருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

# ஹொல்சிம் நிறுவனத்தின் அறிமுக செயற்றிட்டம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா கடந்த மாதம நடைபெற்ற நிலையில் அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் தனது உற்பத்தியினை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகளை ஹொல்சிம் நிறுவனம் மேற் கொண்டிருந்தது. யாழ் மாநகர சபை மைதானத்தில் தனது பிரசார பந்தலை அமைத்திருந்த ஹொல்சிம் லங்கா நிறுவனம் திருவிழாவின் ஆரம்பம் முதல் நிறைவு வரை, திருவிழா நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் மிகுந்த ஆர்வத்துடன் ஹொல்சிம் பிரசார பந்தலுக்கு வருகை தந்திருந்தமை விசேட அம்சமாகும்

திருவிழாவின் ஆரம்பம் முதல் நிறைவு வரையான நாட்களில் நல்லூர் கந்தசுவாமி சந்நிதானத்தில் முருகப் பெருமானின் அருள் வேண்டி திரண்டிருந்த இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு 5000இற்கும் மேற்பட்ட கைப்பைகள் ஹொல்சிம் குழுவினரின் மூலம் இலவசமாக விநியோகிக்கப்பட்டதுடன் ஹொல்சிம் பிரசார பந்தலுக்கு வருகை தந்த பக்தர்களிடையே ஹொல்சிம் சிமெந்து, அதன் உற்பத்தி மற்றும் தரம் தொடர்பான கேள்விகள் கேட்கப்பட்டு அவற்றிற்கு சரியான பதில்களும் வழங்கியோருக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்பட்டன.

நல்லூர் உற்சவம் என்பது இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. குறிப்பாக நாட்டில் சுமார் மூன்று தசாப்த காலமாக நிலவிய அமைதியற்ற சூழ்நிலை மாறி, தற்போது அனைவரும் ஒன்றாக வாழக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டின் அனைத்து பாகங்களிலிருந்தும் இம்முறை நல்லூர் உற்சவத்தில் பங்கு கொள்வதற்காக பக்தர்கள் ஒன்று கூடியிருந்தனர்.

வடமாகாணமானது அதிகமான அபிவிருத்தி நடவடிக்கைகளை சந்தித்து வரும் இக் கால கட்டத்தில் நிர்மாண பணிகளுக்கு மிகவும் பொருத்தமான அதியுயர் தொழிநுட்பத்துடனும் உயர் தரத்துடனும் தயாரிக்கப்படும் ஹொல்சிம் சிமெந்து வட மாகாண மக்களின் வாழ்வினை கட்டியெழுப்பும் நோக்குடன் தனது சேவையினை வட மாகாணத்தில் விஸ்தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இணக்க அரசியலூடாகத்தான் தமிழ் மக்களுக்கு தீர்வு எட்டப்படும்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இணக்க அரசியலூடாகத்தான் தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒருங்கிணைப்பாளருமான வி.கே.ஜெகன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேசத்திற்கு உட்பட்ட மக்களது சமூக மேம்பாடுகள் வாழ்வாதாரத் தேவைகள போன்றவற்றை மையப்படுத்திய கலந்துரையாடல் கொக்குவில் பொற்பதியில் அமைந்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் அகிம்சை ரீதியாக ஆரம்பித்த தமிழர்களது போராட்டம் ஆயுத ரீதியாக பரிணாமம் கண்டு முள்ளிவாய்க்காலோடு முழுவதையும் இழந்த பின்னரும் அகிம்சை ரீதியான போராட்டத்திற்குள் இறங்க வேண்டும் என்று கூட்டமைப்பினர் தெரிவித்திருப்பதென்பது இன்றைய கால அரசியல் நீரோட்டத்திற்கு தமிழ்த் தேசியக கூட்டமைப்பினர் இன்னும் தகுதி பெறவில்லை என்பதையே சுட்டிக் காட்டிநிற் கின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திடமான அரசியல் இலக்குகளை அடைய, சுய சிந்தனையுடனான அரசியல் பலத்தினூடாக தமிழர்களின் சரியான அரசியல் தலைமையை தெரிந்தெடுத்து உரிமைகளையும் அபிவிருத்திகளையும் பெற்றுக் கொள்ளுங்கள் என திடமாக கூறிவருகின்றார். ஆனால் போலித் தேசியத்தை கூறுபவர்களை நம்பி இருந்து இற்றைவரை தமிழ் மக்கள் தமது வாழ்வியலையும் அரசியல் அதிகாரங்களையும் தொலைத்து வருகின்றார்கள். இணக்க அரசியலூடாக மத்திய அரசுடன் ஒரு இணக்கத்தை ஏற்படுத்துவதனூடாகத் தான் தமிழ் மக்களுக்கான எந்த வொரு தீர்வையும் பெற்றுக் கொள்ள முடியும்



இச் சந்திப்பின் போது நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ரவீந்திரதாசன், சமுர்த்தி முகாமையாளர் சுபநாதன் மற்றும் அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர் பொருளாதார உத்தியோகத்தர் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# குப்பைகளை அகற்ற கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை வளாகத்திற்குள் சில பகுதிகள் குப்பை கூழங்களால் நிரம்பி காட்சியளிக்கின்றன. இதனால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் பார்வை யாளர்கள் முகஞ்சுழிக்கும் நிலை ஏற்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வைத்தியசாலையின் பிரதான நுழைவா யில் பகுதியில் வீதிஓரமாக காணப்படும் கழிவு நீர் வடிகால் பகுதி மற்றும் சிற்றுண்டிச சாலை முன்பகுதி பிரேத அறைச சுற்றாடல் பகுதி என்பன குப்பைகளால் நிறைந்து காணப்படுவதும் இப்பகுதிகளில் புற்கள் மற்றும் பார்த்தீனியச் செடிகள் காணப்படுவதாகவும் இதனால் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயார்களுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் குப்பைகளை அகற்ற சுகாதாரப் பகுதியினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(66)

# சிரமதான நிகழ்வு

92 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு ஊர்காவற்றுறை ப.நோ.கூட்டுறவு சங்கத்தில் சிரமதான நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நாரந்தனையில் அமைந்துள்ள சங்கத்திற்குச் சொந்தமான மொத்த விற்பனை நிலையம் அமைந்த கட்டடத் தொகுதியையும் காணியையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். இந்நிகழ்வில் சங்கத்தலைவர் பணிப்பாளர்கள், பொதுமுகாமையாளர், பணியாளர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டனர்.

# புரட்டாதிச் சனி விரதமிருந்து புதுவாழ்வு பெறுவோம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஐந்தொழில்களையும் புரிகின்றார். இந்த ஐந்தொழில் மூலம் உலக ஜீவராசிகள் உலா வருகின்றன. அதற்குரியனவற்றைச் செய்பவர் தான் சனீஸ்வரன். புரட்டாதி மாதம் பிறந்தவுடனே எமது ஞாபகத்துக்கு வருவது புரட்டாதிச் சனியும் நவராத்திரியுமாகும்.



இன்று புரட்டாதிச் சனி முதல் வாரமாகும். இன்றைய இந்தப் புனித புண்ணிய விரதத்தை அனுஷ்டித்தால் சனீஸ்வரனுடைய திரு வருளைப் பெற்று புது வாழ்வு பெறலாம். இந்த விரதம் அனுஷ்டிக்க விரும்புவோர் காலை எழுந்து ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் முடித்து ஆலயதரிசனத்துடன் விரதத்தை ஆரம்பிக்கலாம்.

இன்றைய புரட்டாதிச் சனி விரதம் மிகச்சிறந்த நல்ல விரதமாகும். சனீஸ்வரனுக்கு வழிபாடியற்றி எள்தீபம் ஏற்றி அவரது வாகனமான காகத்துக்கு எள் சாதம் வைத்து மும்முறை வலம் வந்து வணங்க வேண்டும்.

சூரிய பகவானுக்கும் சாயாதேவிக்கும் தோன்றிய சனஸ்வரனுக்கு இந்தப் புரட்டாதிச் சனி விருப்பத்திற்குரிய உகந்த நாளாகும். இந்த நாள் ஒரு புனித புண்ணிய நல்ல விரதநாளாகையால் சைவ சமய மக்கள் அனைவரும் இதனை அனுஷ்டித்தால் உத்தம பலன் கிடைக்கும் சனீஸ்வரனைப் போல கொடுப்பாரும் இல்லை, கெடுப்பாரும் இல்லை" என்பது முது மொழியாகும்.

சனீஸ்வரன் மனித வாழ்வில் மிக முக்கியமானவர் ஒருவருடைய வாழ்வில் மூன்று தடவை இந்த ஏழரைச்சனி வருகின்றது. முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை இது நடைபெறுகின்ற வேளை நமது வாழ்வில் மாற்றங்கள் வருகின்றன.இது அர்த்தாஷ்டமச்சனி என்று நம்மை வந்தடைந்து ஆட்சிபுரிகின்ற போதே நமது வாழ்க்கையில் நன்மை தீமைகள் மாறிமாறி வரும் இந்தச் சனீஸ்வரனுக்கு வழிபாடியற்றும் போது ஒரு சிட்டியில் கறுப்பு நிற துணியாலமைந்த என் பொட்டலத்தை வைத்து நல்லெண்ணெய் விட்டுத் தீபமேற்றி மனம்மொழி மெய்களால் வணங்க வேண்டும். இன்றைய நல்ல நாளில் சனிபகவானுக்குப் பிரீதி செய்து நீல நிறப்பூக்களால் அர்ச்சித்து எள் சாதம் படைத்து நிவேதனமாக்கி எள தீபமேற்றி வணங்குவதன் மூலம் அவரது பார்வையின் கொடூரத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

இன்று விரதமிருப்பவர்கள் மதியம் ஒரு பொழுதுண்டு ஆலயம் சென்று சனீஸ்வர வழிபாடு செயது அவருக்குரிய நாமாவழிகளைப் பாராயணஞ் செய்து இரவு பால்பழம் அருந்தலாம்.

## இன்று விரதம் ஆரம்பம்

ஆகவே இன்றைய புரட்டாதிச் சனி விரதத்தை முறையாக அனுஷடித்து வாழ்வில் நல்ல வளங்களை அடைந்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்வோமாக.

— — — —

**தெய்வத்தமிழ்ச் சுடர்**
**இராசையா ஸ்ரீதரன்**

# வான்வழித் தாக்குதல்களால் மட்டும் தீவிரவாதத்தை அழிக்க முடியாது

## ஈரான் வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

வான் வழியாக நடாத்தப்படும தாக்குதல்களால் மட்டும் ஐ.எஸ். ஜஎஸ். தீவிரவாதிகளை முழுமையாக அழித்துவிட முடியாது என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் முகமது ஜாவத் ஜாரிப் கூறியுள்ளார்.

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது அமெரிக்க விமானங்கள் மூலம் குண்டு வீசித் தாக்குதல் நடாத்தி வருகிறது. தரை வழியாகவும் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்த அதிபர் ஒபாமாவிடம் அந்நாட்டு இராணுவம் அனுமதி கேட்டுள்ளது. இந்நிலையில் ஈரான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து முக்கியத்துவம் பெறுகிறது.

வெளியுறவு பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்க நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் முகமது ஜாவத் பேசியது:

இது சிரியா, ஈராக் ஆகிய நாடுகளில் உள்ள பிரச்சினை அல்ல. சர்வதேச அளவில் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பிரச்சினை. வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் பலர் சிரியாவிலும், ஈராக்கிலும் சண்டையிலும், தீவிரவாதத்திலும் ஈடுபட்டுள்ளனர். இது சர்வதேச பிரச்சினை. இப்போது ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதி களுக்கு எதிராக அணிதிரண்டுள்ள நாடுகளில் பல முன்பு அவர்களை ஆதரித்து உதவியளித்தவர்கள் தான் என்றார்.

## போகோ ஹராம் அமைப்பின் தலைமை தளபதி கைது

நைஜீரியாவில் ஆக்கிரமித்து வரும் போகோஹராம் தீவிரவாத இயக்கத்தின் தலைமை தளபதியை அந்நாட்டு இராணுவம் கைது செய்துள்ளது.

நைஜீரியாவில் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் ஆதிக்கம் செலுத்தி வரும் போகோ ஹராம் தீவிரவாதிகள் அங்கு இதுவரை நூற்றுக் கணக்கானோரை படுகொலை செய்துள்ளனர்.

இந்த நிலையில் அந்த இயக்கத்தின் முக்கிய நபரும் தலைமை தளபதியுமானவரை நைஜீரிய இராணுவம் கைது செய்ததாக சினுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவின் முக்கிய நகரை கைப்பற்றுவதற்காக பயங்கர ஆயுதங்களுடன் உள்ளே நுழைய தயாரான போதே அந்த இயக்கத்தின் தலைமைத் தளபதி கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாத சதி முறியடிப்பு பொலிஸின் முயற்சியால் 15 பேர் கைது




அவுஸ்ரேலியாவில் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகளின் படு கொலை சதியை பொலிஸார் முறியடித்துள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாதிகள் அவுஸ்ரேலியாவில் பொது இடத்தில் ஒருவரின் தலையைத் துண்டித்து கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறைக்கு கிடைத்த தகவல் தொடர்பாக அரசுக்குத் தெரியவந்ததும், சிட்னி மற்றும் பிரிஸ்பேன் நகரில் சுமார் 800 பொலிஸார் அதிரடிச்சோதனையில் ஈடுபட்டனர்.

வீடு வீடாக நடாத்தப்பட்ட இந்தச் சோதனையின்போது 15 பேர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. கைது செய்யப்பட்ட நபர்களில் உமர்ஜான் அசாரி (வயது 22) என்ற வாலிபர் மீது தீவிரவாத தாக்குதல் நடாத்த சதி செய்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுநீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நவம்பர் மாதம் வரை அவரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மேலும் நவம்பர் மாதம் பிரிஸ்பேனில் 20 தலைவர்கள் பங்கேற்கும் உச்சிமாநாடு நடைபெறவுள்ள நிலையில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் கவலை அளிப்பதாக பிரதமர் டோனி அபோட் தெரிவித்தார்.

## சுயமரியாதைக்கு பங்கம் வரக்கூடாது



### அமித் ஷா தெரிவிப்பு

சுயமரியாதைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில், தேர்தல் கூட்டணி இருக்கக்கூடாது என்பதுடன் மகாராஷ்டிர சட்டசபை தேர்தலில் தொகுதிப் பங்கீடு குறித்து சிவசேனா கட்சி விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்றும். பா.ஜ.க் தேசிய தலைவர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிர சட்டசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் கூட்டணியிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்ற பா.ஜ.க தேர்தல் வியூகம் வகுத்து வருகிறது. சிவசேனா கட்சியுடன் தொகுதி உடன்பாடு குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், மும்பையில் இருந்து நேற்றுமுன்தினம் காலை கோல்ஹாபூருக்கு வந்த பா.ஜ.க தலைவர் அமித் ஷா, விமான நிலையத்தில் கட்சித் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றும் போது கூறியதாவது.

மகாராஷ்டிரத்தில் கடந்த 15 ஆண்டுகளாக காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் கூட்டணி அரசு ஊழலுக்கு மேல் ஊழல் புரிந்துள்ளது.அந்த அரசை விரட்ட, வலிமையான கூட்டணியுடன் ஒருமித்த கருத்துடன் பணியாற்ற வேண்டும் என்பதுடன் பா.ஜ.க ஆட்சியை அமைக்கும் என்றும் அமித்ஷா கூறினார்.

உலகச் செய்திகள்

## நைஜீரிய குண்டுவெடிப்பு 20 மாணவர்கள் பலி

நைஜீரியாவின் கல்லூரி ஒன்றில் குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது. இதில் 20இற்கும் அதிகமான மாணவர்கள் கொல்லப்பட்டனர். பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

நைஜீரியாவின் கனோ மாகாணத்தில் உள்ள கல்லூரியில் கடந்த புதன்கிழமை மதியம் பயங்கர குண்டுவெடிப்பு நடாத்தப்பட்டுள்ளது.

இதில் இதுவரை 20இற்கும் மேற்பட்டோர் பலியானதாகவும், பலர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சினுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், குண்டுவெடிப்பு நடந்த சில நொடிகளில் கல்லூரியில் துப்பாக்கி சூடு நடாத்தப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மென்டலின் இசைக்கலைஞர் ஸ்ரீநிவாஸ் காலமானார்.

இசைக்கலைஞர் மென்டலின் ஸ்ரீநிவாஸ் உடல்நலக்குறைவால் சென்னையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 45.


1969ஆம் ஆண்டு, ஆந்திர மாநிலம் பாலகோலில் ஸ்ரீநிவ்வாஸ் பிறந்தார். கடந்த சில நாட்களாகவே உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் சென்னை அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி அவரது உயிர் பிரிந்தது.

மென்டலின் ஸ்ரீநிவாஸனுக்கு 1998ஆம் ஆண்டு பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது. 2010இல் சங்கீத நாடக அக்கடமி விருதினைப் பெற்றார். மிகப் புகழ் பெற்ற வித்துவானாகிய இவரது இழப்பு கர்நாடக இசை உலகிற்கு பேரிழப்பாகும்.



## சீனா- இந்தியா எல்லைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எட்டப்படும்



### தலாய்லாமா தெரிவிப்பு

சீனா, இந்தியா இடையேயான எல்லைப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வு காணமுடியும் என்று திபெத் மதத் தலைவர் தலாய் லாமா தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான எல்லைப் பிரச்சினையை அவர் திபெத் பிரச்சினையுடன் இணைத்து பேசியதுடன் லே பகுதியிலிருந்து 300 கி.மீ தொலைவில் உள்ள சுமர் கிராமத்தில் சீன மற்றும் இந்திய படைகளுக்கு இடையே சில தினங்களுக்கு முன் மோதல் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டு பதற்றம் காணப்பட்டது.

இத்தகைய நிலையில் இந்தியாவில் பயணம் மேற்கொண்டுள்ள சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் எல்லை பிரச்சினை, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றி பிரதமர் நரேந்திர மோடி டில்லியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது நிருபர்களிடம் தலாய் லாமா கூறியதாவது:

திபெத் பிரச்சினையும் இந்தியாவின் பிரச்சினைதான் என்பதால் சீன அதிபர் உண்மை நிலைமையை புரிந்துகொள்ளும் திறந்த மனம் படைத்தவர். இந்தியாவின் பல்வேறு பிராந்தியங்களில் உள்ள மக்களுக்கு இடையே நல்லிணக்கம் நிலவுவதை புரிந்து கொண்டு சீனா அதிலிருந்து பாடம் கற்கவேண்டும்.

1950 இற்கு முன் வடக்கு எல்லைப்பகுதியில் அமைதி நிலவியதுடன் ஒரு படை வீரர் கூட அங்கு இருக்கவில்லை. இன்றைக்கு இல்லாவிட்டாலும் வரும் காலத்தில் இந்தப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டியது அவசியமாகும். இதற்கு படைப்பலம் தேவையில்லை. பேச்சுவார்த்தை போதும். பேச்சுவார்த்தை நடந்தால் புரிந்துணர்வு ஏற்படும் என்றார்.

## தவறான முறைப்பாட்டால் இந்திய மாணவிக்கு நஷ்ட ஈடு

நியூயோர்க்கில் ஆசிரியர்களுக்கு மிரட்டல் விடுத்து மின்னஞ்சல் அனுப்பியதாக குற்றம் சாட்டப்பட்ட இந்திய தூதரக அதிகாரியின் மகள் நிருபராதி என நிரூபிக்கப்பட்டதையடுத்து அவருக்கு 2,25,000 அமெரிக்க டொலர் (ரூ.1கோடியே 36 இலட்சம்) நஷ்ட ஈடு அளிக்க நியூயோர்க் நகரம் முன்வந்துள்ளது.

இந்திய தூதரக அதிகாரியாக பணியாற்றிய தேவசிஷ் பிஸ்வாஸின் மகள் கிருத்திகா (18). நியூயோர்க் நகரில் உள்ள குயின்ஸ் ஜோன் பிரவுன் உயர நிலைப் பள்ளியில் படித்து வந்தார். கடந்த 2011ஆம் ஆண்டு, அவரது பள்ளி ஆசிரியர்களுக்கு மிரட்டல் விடுத்து அருவருக்கத்தக்க வார்த்தைகளைப் பயன்படுத்தி மின்னஞ்சல் அனுப்பியதாக கிருத்திகா மீது புகார் கூறப்பட்டது.

கிருத்திகா சார்பில் வழக்கறிஞர் ரவி பட்ரா ஆஜரானார். மின்னஞ்சல் அனுப்புப்பட்ட நேரத்தில் பெரு வணிக வளாகம் ஒன்றில் பொருட்களை வாங்கச் சென்றுள்ளார் கிருத்திகா. அது, அங்குள்ள கமராக்களில் ஆய்வு செய்து உறுதிப்படுத்தப்பட்டது. மேலும், கணினி தடயவியல் வல்லுநர்கள் நடத்திய விசாரணையில் மின்னஞ்சலை அனுப்பியது கிருத்திகா இல்லை என்பதும், வேறொரு மாணவர்தான் அக்குறத்தை செய்துள்ளதும் தெரிய வந்தது. இதையடுத்து தனது நற்பெயருக்கு இழுக்கு ஏற்பட்டதற்கு ரூ. 1.5 மில்லியன் டொலர் (சுமார் ரூ. 9 கோடி) நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனக் கோரி நீதிமன்றத்தில் கிருத்திகா வழக்கு தொடர்ந்தார். இந்நிலையில், கிருத்திகாவுக்கு 2,25,000 அமெரிக்க டொலர் வழங்க நியூயோர்க் நகர நிர்வாகம் முன்வந்தது. அதை கிருத்திகா ஏற்றுக் கொண்டார்



# யாழ்-கொழும்பு பேருந்து சேவை கிடைத்தது வழித்தட அனுமதி

## அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தார் அமைச்சர் டக்ளஸ்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக இடைநிறுத்தப்பட்டிருந்த யாழ்.-கொழும்பு தனியார் பேருந்து சேவையைத் தற்காலிகமாகத் தொடர்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள அமைச்சரின் வாசஸ்தலத்தில் நேற்றைய தினம் சேவைகள் இடைநிறுத்தப்பட்ட யாழ்.-கொழும்பு தனியார் பேருந்து உரிமையாளர்களுடனான் கலந்துரையாடலின் போது அமைச்சரால் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இம்மாதம் 17 ஆம் திகதி யாழ்.-கொழும்பு தனியார் பேருந்து உரிமையாளர்கள் அமைச்சரது வாசஸ்தலத்தில் சந்தித்து தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனடிப்படையில் இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே அமைச்சரவையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து கலந்துரையாடிய அமைச்சர், குறித்த விடயம் தொடர்பாக தனியார் போக்குவரத்துதுறை அமைச்சர் சி.பி.ரட்ணாயக்கவினது கவனத்திற்கும் கொண்டு வந்தார்.

இதனடிப்படையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிபார்சுக்கு அமைவாக ஒரு வருட காலத்திற்கு தற்காலிக அனுமதி வழங்கப்படுவதாகவும், போக் குவரத்துச் சேவைகளின் போது கடைப்பிடிக்கப்பட வேணடிய விதிமுறைகள் தொடர்பில் உரிய கண்காணிப்புச் செலுத்தப்பட்டு அதன்பின்னரே நிரந்தர அனுமதி வழங்குவது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுமென அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க தெரிவித்திருந்தமையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன் போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள உரிமையாளர்களது முழுமையான விபரங்களையும் தமக்கு சமர்ப்பிக்குமாறும், அதனடிப்படையிலேயே சேவைகளைத் தொடர்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தர முடியுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா் தெரிவித்தார்.

இதனடிப்படையிலேயே தனியார் பேருந்து உரிமையாளர்கள் சேவையில் ஈடுபட முடியுமென்பது குறிப்பிடத்தக்கது.

சேவைகள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாகத் தமது வாழ்வாதாரம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு துரிதகதியில் தீர்வினை பெற்றுக் கொடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

## இரணைமடு...

மேற்படி குடிநீர்த் திட்டத்தை ஈ.பி.டி.பி.யாகிய நாம் வரவேற்கின்றோம். இரணைமடு குடிநீர்த் திட்டமானது, பலவீனமாக உள்ள தற்போதைய இரணைமடுக் குளத்தின் கட்டினைப் புனரமைப்புச் செய்து மேலும் தேவைக்கேற்ப உயர்த்துவதோடு, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதாகும். அத்தோடு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குடிநீர்த் தட்டுப்பாடான பிரதேசங்களுக்கு குறிப்பாக பூநகரி போன்ற பிரதேசங்களுக்கு குடிநீர் விநியோகத்தை வழங்கவும் திட்டம் வாய்ப்பு வழங்குகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்த்தேவையை பூர்த்தி செய்து மேலதிகமாக சேமிக்கப்படும் சொற்ப நீரை யாழ்ப்பாணத்துக்கு குடிநீர்த் தேவைக்கு வழங்குவதோடு, யாழ்ப்பாணத்தின் வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுமே இந்த குடிநீர்த் திட்டத்தின் நோக்கமாகவுள்ளது. இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய இக்குடி நீர்த்திட்டத்தையே தமது அரசியல் சுய இலாப நோக்கங்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்கின்றனர்.

இத்திட்டத்தை கைவிடுமாறு கூறுகின்றனர். இதனால் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சுமார் 23 ஆயிரம் மில்லியன் ரூபாய் என்ற பாரிய நிதி திரும்பிச் செல்லக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலிலேயே வடக்கு மக்களுக்கு வரப்பிரசாத மாக கிடைத்த அந்த நிதியை எமது மக்கள் இழந்துவிடக்கூடாது என்பதற்காக ஈ.பி.டி.பி.யாகிய நாம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இரணைமடு-யாழ்ப்பாணம் குடிநீர்த்திட்டத்தை அமுல்படுத்துவதில் கூட்டமைப்பினர் ஏற்படுத்தும் தடை தொடர்பிலும், இரு மாவட்ட மக்களினதும் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்கு மாற்றுத் திட்டங்கள் ஏதும் உள்ளனவா? என்பது தொடர்பிலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுடன் ஈ.பி.டி.பி.யாகிய நாம் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தோம்.

இரணைமடுத் திட்டத்தோடு இணைந்த மாற்றுத்திட்டம் ஒன்றை ஆராயும் அதேவேளை கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் நிலவும் குடிநீர்ப்பிரச்சினைக்கு விரைவான தீர்வொன்றைக் காண்பதற்கான அவசர அவசியத்தையும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுக்கு ஈ.பி.டி.பி. எடுத்துக்கூறியுள்ளது.

இவ்வாறான சூழலிலேயே கூட்டமைப்பினர் இரணைமடு யாழ்ப்பாணம் குடிநீர்த்திட்டம் கைவிடப்பட்டுவிட்டதாக கூறிவருகின்றனர். மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய நல்ல பல திட்டங்களை உதாசீனம் செய்துவரும் கூட்டமைப்பினர் இக்குடிநீர்த்திட்டத்தையும் எதிர்க்கின்றனர்.

பிரச்சினைகளுக்கும், திட்டங்களுக்கும் நடைமுறைச் சாத்தியமான தீர்வைக் காண்ப தைவிடவும் தமது அரசியல் பிழைப்புக்காக அனைத்தையும் சீர்குலைக்கின்ற கூட்டமைப்பின் செயற்பாடுகளை தமிழ் மக்கள் கண்டிக்க வேண்டும். திட்டமும், நிதியும் கைவசம் இருந்தும் மாகாண சபையை பொறுப்பேற்றுள்ள கூட்டமைப்பு அர்த்தமற்ற காரணங்களைக் கூறி இரணைமடு - யாழ்ப்பாணம் குடிநீர்த் திட்டத்தை நிராகரிக்கின்றது. செயற்படுத்த தெரியாமையும், செயற்படுத்த விரும்பாமையுமே கூட்டமைப்பின் தொடர்ச்சியான நிலைப்பாடாக இருப்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் ஈ.பி.டி.பி. கேட்டுக் கொள்கின்றது.

## ஒக்ரோபர்...

நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஒக்ரோபர் 13ஆம் திகதி காலை 10.30 மணி முதல் நடைபெறவுள்ளது. இதில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளதுடன், யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

இவற்றுக்குரிய முன்னாயத்தங்களை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றியும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் தங்கள் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி தொடர்பான விளக்கங்களை ஜனாதிபதிக்கு எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பது பற்றியும் இந்தக் கலந்துரையாடலின்போது அறிவுறுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள், அலுவலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## பிரிவினையைத்...

வாக்கெடுப்பை ஒரு சிறந்த ஜனநாயக நடவடிக்கை என்றும் அவர் வரவேற்றிருக்கிறார்.

அதேவேளை, ஸ்கொட்லாந்து மக்கள் எடுத்த முடிவு எதுவாக இருந்த போதிலும் ஐக்கிய இராச்சியத்தின் முக்கிய கட்சிகள் அனைத்தினதும் தலைவர்களும், ஸ்கொட்லாந்துக்கு இன்னமும் மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கூறியிருப்பதையும் அவர் வரவேற்றிருக்கிறார்.

ஆகவே ஒரு தனியான வாழ்விடத்தில் உள்ள, தனியான இன மக்களுக்கு உரிய அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவதன் மூலமே பிரிவினையை தடுத்துக் கொள்ள முடியும் என்பது இலங்கை உட்பட பல நாடுகளின் தலைவர்களுக்கு ஒரு பாடம் என்றும் அவர் கூறினார்.

# யாழ்.சிறையில் இந்திய கைதி தற்கொலை செய்ய முயற்சி

இலங்கைக்கு கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய கைதியொருவர், தற்கொலைக்கு முயன்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த எஸ்.ராஜா (வயது-32) என்பவரே இவ்வாறு தற்கொலைக்கு முயன்ற நிலையில், கடந்த புதன்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் கடந்த ஒரு வருட காலத்திற்கு முன்னர் 4 பேரில் ஒருவராக கைது செய்யப்பட்ட சந்தேகநபரே இவ்வாறு தற்கொலைக்கு முயன்றுள்ளார் என அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## பிரிவினைக்கான...

மாக அங்குள்ள மக்களுக்கு படிப்படியாக அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டு, அதன் இறுதியிலேயே இப்படியான ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இலங்கையில் இலங்கை தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கக்கூடிய இலங்கை - இந்திய ஒப்பந்தம் போன்ற வாய்ப்புக்களை இலங்கைத் தமிழ் தலைவர்கள் தவறவிட்டுவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மின் கம்பத்திற்கு...

குறித்த பகுதியில் நான்கு குழிகளைத் தோண்டிய போது, 3 உடைந்த பல் துண்டுகளும், உடைந்த நான்கு எலும்புத் துண்டுகளும், 4 முதல் 5 மண்டைஓடு துண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட மண்டையோடு மற்றும் எலும்புகள் தொடர்பில் ஆய்வு செய்யும்படி ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் இ.சபேசன், சட்ட வைத்தியதிகாரிக்கு உத்தர விட்டுள்ளார்.

(21,25)

## நல்லிணக்கத்திற்கான...

மூனின் பேச்சாளர், ஸ்டிபென் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க முனைப்புக்கள் தொடர்பில் இலங்கை எவ்வித உதவிகளையும் கேட்டதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களும் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் உதவிகளை கோரத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நல்லிணக்க முனைப்புக்களுக்கு வெளிச்சக்திகளின் உதவி அவசியமற்றது எனவும் ஐ.நா. யுத்தக் குற்றச் செயல் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்கப் போவதில்லை எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இறந்த குழந்தைக்கு...

வைத்தியர்கள் அறிவித்தனர்.

இதனையடுத்து குழந்தையின் இறுதிக் கிரியைகளை பெற்றோர் நடத்திக் கொண்டிருந்த போது குழந்தையின் உடலில் அசைவை அவதானித் ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து தமது குழந்தை உயிரோடு இருப்பதாக எண்ணிய பெற்றோர் இணுவி லுள்ள இரண்டு தனியார் வைத்தியசாலைகளில் காட்டினர். குழந்தையைப் பரிசோதித்த வைத்தியர்கள் தெல்லிப்பளைக்கு கொண்டு செல்லுமாறு தெரிவித்தனர். தெல்லிப்பளைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு குறித்த குழந்தை அதி தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு ஒரு மணி நேரத்தின் பின்னர் அது இறந்த விடயம் மீண்டும் உறுதி செய்யப்பட்டது.

இதன் போது குழந்தையின் உடலை சவச்சாலைக்கு கொண்டு செல்ல முயன்ற போது அதனை பலவந்தமாக பறித்த பெற்றோர், உறவினர் குழந்தையின் உடலுடன் தப்பிச் சென்றனர். இதனையடுத்து வைத்தியசாலை நிர்வாகம் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து பொலிஸாரின் உதவியுடன் குழந்தையின் சடலம் மீளவும் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தனிநாட்டுக்...

செய்யப்பட்டுள்ளன.

32 கவுன்சில்களில், 30 கவுன்சில்களின் முடிவுகள் வெளியாகியுள்ளன. 1,877,252 மக்கள் ஸ்கொட்லாந்தில் இருந்து பிரிய எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். தனிநாடுக் கோரிக்கைக்கு ஆதரவாக 1,512,688 மக்கள் வாக்களித்துள் ளனர்.

பொது வாக்கெடுப்பில் வெற்றி பெற மொத்தம் 1,852,828 வாக்குகளே தேவைப்பட்டன. 55வீத வாக்குகள் ஸ்கொட்லாந்து, பிரிட்டனிலிருந்து பிரிய எதிர்ப்பு தெரிவித்து பதிவு செய்யப்பட்டுள்ளன.

பிரிட்டனின் ஓர் அங்கமாக கடந்த 307 ஆண்டுகளாக நீடித்த ஸ்கொட்லாந்து, தனி நாடாகப் பிரிந்து செல்ல விரும்பியது.

ஸ்கொட்லாந்து தனி நாடாகப் பிரிவதற்கு, அந்நாட்டிலேயே உள்ள ஆதரவு மற்றும் எதிர்ப்பு ஆகியவற்றின் உண்மையான நிலையறிய அங்கு நேற்று முன்தினம் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

நாடு முழுவதும் சுமார் 2,600 வாக்குச் சாவடி மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. 16 வயது நிரம்பியவர்கள் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். 86 சதவீத வாக்குகள் பதிவாகின.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், அமெரிக்க அதிபர் ஒபாமா ஆகியோர், ஸ்கொட்லாந்து பிரிட்டனுடன் இணைந்திருக்க வேண்டுமென தங்கள் விருப்பத்தைத் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாத அச்சுறுத்தலை முறியடிக்க ஆசிய நாடுகள் ஒன்றிணைய வேண்டும்

## ஜனாதிபதி அழைப்பு



தீவிரவாதிகள் எனும்போது அவர்கள் எல்லோரும் ஒரே விதமானவர்களே. அவர்களது மனப்போக்கும் ஒரே விதமானவை.

ஆசிய நாடுகள் தீவிரவாத அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்கும் போது இறைமையைப் பாதுகாக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆசிய அரசியல் கட்சிகளின் எட்டாவது சர்வதேச மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு, கொழும்பு நெலும் பொக்குன மகிந்த ராஜபக்ஷ கலையகத்தில் நேற்று இடம்பெற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.


அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாடொன்று தீவிரவாத அச்சுறுத்தலுக்கு உள்ளாகும்போது, அந்நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் முரண்பாடுகளை மறந்து ஒருமித்துச் செயற்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் இங்கு உரையாற்றினார்.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யமீன் உட்பட்ட முக்கிய வெளிநாட்டுப் பிரமுகர்களும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டில் 33 நாடுகளைச் சேர்ந்த 250 தலைவர்கள் பங்குகொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலணையில் நேற்று உருளைக்கிழங்கு விநியோகம்



(வேலணை)

வேலணை ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தினூடாக வறட்சி நிவாரணமாக ஒரு குடும்பத்திற்கு 5 கிலோ உருளைக்கிழங்கு வழங்கப்பட்டு வருகிறது.

வேலணை பிரதேச செயலகத்தினால் நேற்று முதல் இந்த விநியோகம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இதில் வேலணை பிரதேசத்திற்குட்பட்ட 4751 குடும்பங்களுக்கு தலா 5 கிலோ உருளைக்கிழங்கு வீதம் கிடைக்கவுள்ளது.

வேலணை பிரதேச செயலர் மஞ்சுளா சதீஸன், பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா ஆகியோர் கலந்துகொண்டு நிவாரணத்தை மக்களுக்கு வழங்கிவைத்தனர். (05,21)

# வாழைத்தோட்டத்தில் மோட்டர் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தியில் வசித்துவரும் சின்னப்பு சிவபாதம் என்பவரது உரும்பிராயிலுள்ள வாழைத் தோட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் பார்த்த போது அங்கு நீர் இறைக்கும் மோட்டர் இருந்ததாகவும், வீடு சென்றுவிட்டு பி.ப. 3.30 மணியளவில் பார்த்த போது அதனை யாரோ திருடிச் சென்றுள்ளதாகவும் கோப்பாய் பொலிஸில் சிவபாதம் என்பவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவோ திருடிய பொருள் கைப்பற்றப்படவோ இல்லை. கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குடும்பத் தகராறினால் அடிதடி மனைவி காயம்; கணவன் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

கணவரின் தாக்குதலில் படுகாயமடைந்ததாக கருதப்பட்ட குடும்பப் பெண்ணொருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாவற்குழியைச் சேர்ந்த சசி பாரதி (வயது - 34) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு கணவனின் தாக்குதலுக்கு இலக்காகி கையில் படுகாயமடைந்துள்ளார்.

குடும்பத்தகராறு காரணமாக நேற்றுக்காலை மரக்கட்டிலின் சட்டத்தினால் தாக்கிய கணவன் அங்கிருந்து தலைமறைவாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ,25)

# டெங்கு ஒழிப்பு முல்லையில் தீவிரம்

(முல்லைத்தீவு)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முல்லைத்தீவில் முழு வீச்சில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதன் ஒரு முக்கிய அம்சமாக ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் டெங்கு ஒழிப்புக்குழு முல்லை மாவட்டத்துக்கு விஜயம் செய்து கள நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

இந்த மாவட்டத்தில் உள்ள முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் அனைவருக்குமான விசேட கூட்டம் நேற்று மேலதிக அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்தாஸ் தலைமையில் முல்லை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது. (40)

# சதிப்புரட்சி அச்சம் காரணமாக இந்திய உதவியை நாடிய ஜே.ஆர்.

## காலம் கடந்து சொல்கிறார் நட்வர்சிங்

இலங்கையில் சதிப்புரட்சி இடம்பெறலாம் என அஞ்சிய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, இந்தியாவின் உதவியை நாடினார் என முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் காணபடும் குழப்பங்களைத் தவிர்த்திருக்க முடியுமா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், ஆரம்பத்திலிருந்தே பல தவறுகள் இடம்பெற்றுள்ளன. புதுடில்லிக்கென ஒரு கொள்கை காணப்பட்ட அதேவேளை, முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் வட இலங்கை தமிழ் நாட்டின் ஒரு பகுதி என்ற கொள்கையை பின்பற்றினார்.

இந்த நிலையில் ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெறலாம் என்ற அச்சத்திலேயே இந்தியாவின் உதவியை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கோரினார்.

இதன் காரணமாக நாங்கள் குழப்பத்துக்குள் சிக்குண்டோம். பிரபாகரன் எங்களது ஒவ்வொரு



தகவலையும் இடைமறித்துக் கேட்டார். அதனால் அவர் எங்களுக்கு முன்னரே செயற்பட்டார். ரஜீவ் காந்தி நல்லவர். 1991 ஆம் ஆண்டவில் அவருக்கு தான் செய்த தவறுகள் தெரிந்திருந்தன என்றும் நட்வர்சிங் குறிப்பிட்டார்.

# காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவில் தவசிக்குளம், மிருசுவில் எனும் விலாசத்தில் வசித்துவரும் அருளானந்தன் பொரொஸ் புஸ்பராசா (வயது - 40) என்பவர் கடந்த 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணியளவில் வீட்டில் இருந்து காணாமற்போயுள்ளதாக அவரது தாயாராகிய அருளானந்தன் புஸ்பராணி என்பவர் கோப்பாய் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# படுகொலையை கண்டித்து யாழ். நகரில் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மருத்துவர் ராஜனி திராணகமவின் படுகொலையைக் கண்டித்து யாழ். நகரின் பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

"பயங்கரவாதிகளினால் 1989 செப்ரெம்பர் 21 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட மருத்துவரான ராஜனி திராணகமவின் படுகொலையை வன்மையாகக் கண்டிப்போம்" என்று சிவப்பு நிற மையினால் எழுதப்பட்டு யாழ். நகரில் பல இடங்களிலும் இச் சுவரொட்டிகள் இனந்தெரியாதோரினால் ஒட்டப்பட்டுள்ளது. (இ)

# வீதி விபத்தில் மூவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

தனியார் பேருந்தும் டிப்பரும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் மகாத்மா காந்தி வீதியில் நேற்றுக் காலை 9.45 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில், படுகாயமடைந்த நிலையில் மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

யாழ். கச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து, அதே வீதியில் முன்பாக சென்ற டிப்பர் வாகனம் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு திரும்பும் போது பின்னால் வந்த கச்சேரியில் இருந்து பயணிக்கும் தனியார் பஸ் மோதியதில் பஸ்ஸில் பயணித்த மூவர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த பயணிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற கொண்டு வருவதுடன், வாகனங்கள் இரண்டினையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர். (25)

# யுத்தகால இடப்பெயர்வு 25 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

யுத்தகாலத்தில் இந்தியாவுக்கு தப்பிச்சென்ற வடக்கைச் சேர்ந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் நாடு திரும்பியுள்ளனர். அவர்களில் 17 ஆண்களும் அடங்குகின்றனர். ஏனைய எட்டுப் பேரும் பெண்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் நாடு திரும்புவதற்கு சர்வதேச அகதிகள் அமைப்பு உதவியளித்துள்ளது.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாகவே அவர்கள் நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளனர்.

# கண்டி திரித்துவக் கல்லூரி புலிகளுக்கு நிதி வழங்கியதா?

## இரகசிய பொலிஸார் விசாரணை

கண்டி, திரித்துவக் கல்லூரிக்குச் சொந்தமான 202 மில்லியன் ரூபா நிதி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி கல்லூரியின் பழைய மாணவரொருவர் செய்த முறைப்பாட்டையடுத்து, கண்டி மேலதிக நீதிவான் துரித விசாரணைகளை மேற்கொள்ளும்படி குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவுக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார். புலிகளுடன் தொடர்புகளைப் பேணிவந்த மேற்படி கல்லூரியின் முன்னாள் அதிபர் ரொடி கில்பட் மேற்படி மோசடியில் ஈடுபட்டிருந்ததாகவும், தற்போது அவர் வெளிநாடொன்றில் வசித்து வருவதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.